**මුදල් කොමිෂන් සභාව**

**நிதி  ஆணைக்குழு**

# Finance Commission

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ

ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154ජ (4) ව්‍යවස්ථාව ප්‍රකාරව

2024 වර්ෂය සඳහා

## ගරු ජනාධිපතිතුමා වෙත ඉදිරිපත් කරනු ලබන නිර්දේශ

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின்
உறுப்புரை 154R (4) பிரகாரம்

## கௌரவ ஜனாதிபதிக்கு 2024 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள்

RECOMMENDATIONS SUBMITTED TO THE HON. PRESIDENT

In terms of Article 154R (4) of the Constitution of the

Democratic Socialist Republic of Sri Lanka

for the year 2024

**2023 ඔක්තෝබර්**

**ஒக்ரோபர** 2023

**October 2023**

මුදල් කොමිෂන් සභාව
(ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154 "ඊ" ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී.)
நிதி ஆணைக்குழு
(அரசியலமைப்பின் 154 "ண" ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்டது)
FINANCE COMMISSION
(Established under Article 154 "R" of the Constitution)

03, සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව.
இல. 03, சரண மாவத்தை, ராஜகிரிய, இலங்கை.
03, Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka.

මගේ අංකය / எனது இல. / My No. FC/PSR/08/01/2023

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2023.10.31

கௌரவ ரணில் விக்ரமசிங்க,

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி,

ஜனாதிபதி செயலகம்,

கொழும்பு 01.

கௌரவத்துக்குரிய ஜனாதிபதி அவர்களே,

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது உறுப்புரை 154R இன் (4)(a) உபபந்தி மூலம் வேண்டிக் கொள்ளப்படுவதற்கிணங்க, 2024ம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் அறிக்கையை இதனுடன் சமர்ப்பிப்பதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அறிக்கையானது அடுத்த ஆண்டிற்காக மாகாண சபைகளுக்கு தேவைப்படும் நிதி தொடர்பான பரிந்துரைகளையும், சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடைந்து கொள்ளும் நோக்குடன் பாதீட்டில் இருந்து மாகாண சபைகளுக்கு மத்தியில் ஒதுக்கப்படும் நிதி பகிர்ந்தளிப்பு மீதான கொள்கைகளையும், மாகாண மட்டத்தில் அறிவார்ந்த அடிப்படையில் வளங்களை ஒதுக்கீடு செய்து வினைத்திறனாக பயன்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்ட குறிப்பிடத்தக்க கொள்கைப் பரிந்துரைகளையும் உள்ளடக்கியுள்ளது.

உங்கள் விசுவாசத்துக்குரிய,

சுமித் அபேசிங்க

தலைவர்

நிதி ஆணைக்குழு

සභාපති / தலைவர் / Chairman (+94)011 2866724
ලේකම් / செயலாளர் / Secretary (+94)011 2866824
කාර්යාලය / அலுவலகம் / Office (+94)011 2866747
ෆැක්ස් / தொலைநகல் / Fax (+94)011 2866671, (+94)011 2866679
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail info@fincom.gov.lk
www.fincom.gov.lk

# நிதி ஆணைக்குழு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்
அரசியலமைப்பின்
உறுப்புரை 154R (4) பிரகாரம்

## கௌரவ ஜனாதிபதிக்கு 2024 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள்

**ஒக்ரோபர் 2023**

# பொருளடக்கம்

**உள்ளடக்கம்** **பக்க இல.**


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 01-02 |
| 2. | இலங்கையின் பல்வேறு ஆட்சி மட்டங்களுக்கான நிதி அதிகாரப் பரவலாக்கம் | 03-06 |
| 3. | 2024 ஆம் ஆண்டுக்கான மூலதன மற்றும் மீளெழும் தேவைகளை மதிப்பீடு செய்தல் | 07-18 |
| 4. | 2024 ஆம் ஆண்டுக்கான அரச மானிய நிதியை மாகாண சபைகளுக்கிடையில் பகிர்ந்தளிப்பதற்கான பரிந்துரைகள் | 19-24 |
| 5. | சில கொள்கை பரிந்துரைகள் | 25-32 |

**இணைப்பு**

**இணைப்பு 01**: உத்தேச வருமான சீர்படுத்தலின் பின்னர் கூட்டு சுட்டெண்ணுக்கு அமைய மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியத்தின் ஒதுக்கீடு பற்றிய விளக்கம் 33

# அத்தியாயம் 1

## அறிமுகம்

### 1.1 பின்னணி

நிதி ஆணைக்குழு, மதிப்பிடப்பட்ட வளத்தேவைப்பாடு மற்றும் கொள்கைகளுக்கமைவாக 2024 ஆம் ஆண்டுக்கான அரசினால் மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய நிதி பற்றிய வருடாந்த பரிந்துரையினை அரசியலமைப்பின் உறுப்புரை 154ண (3) க்கு அமைய கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றது. நாட்டின் சமமான பிராந்திய அபிவிருத்தியினை இலக்காகக் கொண்ட அறிவார்ந்த முறையிலான பகிர்ந்தளிப்பின் போது பயனுள்ளதும் திறனானதுமான வளங்களின் பயன்பாட்டில் கவனம் செலுத்தும் சில கொள்கைப் பரிந்துரைகளும் இதனுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்பரிந்துரையினை தயாரிக்கும் செயற்பாட்டின் போது, மாகாணங்களினால் கோரப்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்கள் பற்றி மாகாண அதிகாரிகளுடனும் தேசிய அளவில் தொடர்புபட்ட அதிகாரிகளுடனும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் மாகாணங்களின் நிதி தேவைப்பாடுகளுடன் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆணைக்குழுவின் அரசியலமைப்பு ஆணைக்கமைய, அனைத்து மாகாண சபைகளுக்கும் அறிவார்ந்த முறையில் பரிந்துரை செய்யப்பட்ட மொத்தத் தொகையும் இவ்வறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது .

மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான பொறுப்புக்களை நிறைவேற்ற மாகாணங்களுக்கு போதுமான நிதி அரசினால் மாற்றப்படும் என நிதி ஆணைக்குழு எதிர்ப்பாக்கின்றது. மேலும், குறைந்தபட்ச பிராந்திய ஏற்றத்தாழ்வுகளுடன் மக்கள் உயர்ந்த சமூக பொருளாதார தரத்தினை அடைவதற்கு இங்கு முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைப் பரிந்துரைகளின் மீதான அரசின் உரிய கவனம் தேவைப்படுகிறது.

### 1.2 நிதி ஆணைக்குழுவின் ஆணை

மாகாண சபைகளின் முறையான செயற்பாட்டிற்கு தேவையான நிதி உணர்வுகளுக்கு புறம்பான வகையில் பரிந்துரை செய்யப்படுகிறது என்பதனை உறுதிப்படுத்த இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்த ஏற்பாட்டின் கீழ் 1987 ஆம் ஆண்டு நிதி ஆணைக்குழு நிறுவப்பட்டது. அதன்படி, உறுப்புரை 154ண (3), (4) மற்றும் (5) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிதி ஆணைக்குழுவின் ஆணை பின்வருமாறு.

**உறுப்புரை 154ண (3)** மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமான நிதியினை ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் ஆலோசனைக்கமைய வருடாந்த பாதீட்டிலிருந்து அரசாங்கம் ஒதுக்கம் செய்ய வேண்டும்.

**உறுப்புரை 154ண (4) ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்வது ஆணைக்குழுவின் கடமையாகும் என்பது**

அ) வருடாந்தம் அரசினால் மாகாணங்களின் தேவைக்காக வழங்கப்படும் நிதி பல்வேறு மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பது தொடர்பான கொள்கை நியமங்கள் மற்றும்

ஆ) மாகாண நிதி தொடர்பில் ஜனாதிபதியால் ஆணைக்குழுவிற்கு பொறுப்பு வழங்கப்படும் ஏனைய விடயங்கள்

**உறுப்புரை 154ண (5)** நாட்டின் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை அடையும் நோக்கில் அவ்வாறான கொள்கை நியமங்களை நிதி ஆணைக்குழு முறைப்படுத்த வேண்டும்.அத்துடன் கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்களாவன –

அ). ஒவ்வோர் மாகாணத்தினதும் சனத்தொகை

ஆ). ஒவ்வோர் மாகாணத்தினதும் தனிநபர் வருமானம்

இ). சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை படிப்படியாக குறைக்க வேண்டியதன் அவசியம் மற்றும்

ஈ). ஒவ்வோர் மாகாணத்தினதும் தனிநபர் வருமானத்திற்கு இடையிலான வேறுபாடுகளை படிப்படியாகக் குறைக்கவும் மாகாணங்களின் உயர்மட்ட தனிநபர் வருமானத்தினை பேணுவதற்குமான அவசியம்

**உறுப்புரை 154ண (7)** இன் படி "மேற்குறிப்பிட்ட உறுப்புரையின் கீழ் நிதி ஆணைக்குழுவினாலான பரிந்துரைகளை ஜனாதிபதி பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும்.அத்தோடு அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட வேண்டும்" எனக் கோருகின்றது.

### 1.3 நிதி ஆணைக்குழுவின் பணிகள்

நிதி ஆணைக்குழுவின் முதன்மை செயற்பாடானது மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானளவு நிதியினை வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்வதற்கான பரிந்துரைகளை அரசிற்கு முன்வைப்பதாகும். அத்துடன் மேலே 1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்பு ஏற்பாட்டுக்கமைய நாட்டில் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை அடைவதற்கு அத்தகைய நிதியினை ஒன்பது மாகாணங்களுக்கும் பகிர்ந்தளிப்பது தொடர்பான கொள்கை நியமங்கள் மீதான பரிந்துரைகளை மேற்கொள்வதுமாகும். இச்செயற்பாட்டில் நிதி ஆணைக்குழு,

அ. மாகாண சபைகளுக்கு அவற்றின் வருடாந்த வளத் தேவைப்பாட்டினை தயாரிப்பதற்கும் முன்வைப்பதற்கும் தேவையான வழிகாட்டல்களை வழங்குகிறது.

ஆ. மாகாண அதிகாரிகளுடனான விரிவான கலந்துரையாடல்களின் பின்னர் மாகாண சபைகளின் தேவைகளை மதிப்பிடுகிறது.

இ. தேசிய பாதீட்டிலிருந்து மாகாண சபைகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு தொடர்பாகவும் அந்நிதியினை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பது தொடர்பாகவும் ஜனாதிபதிக்கு பரிந்துரைகளை முன்வைத்தல்.

ஈ. ஜனாதிபதியின் / அரசின் அனுமதியுடன் மாகாணத்தின் பல்வேறு துறைகளுக்காக தேசிய பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியை பகிர்ந்தளித்தல்.

உ. நிதிப் பயன்பாட்டின் திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கில் வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டங்களை உருவாக்குவது தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல்.

ஊ. தொடர்புபட்ட உரித்தாளர்களின் பங்குபற்றலுடன் மாகாண அபிவிருத்தி திட்டங்களை மீளாய்வு செய்து அவற்றிற்கான ஒப்புதலை வழங்குகிறது.

எ. அபிவிருத்தியில் தலையீடு செய்யும் நடவடிக்கையாக தேசிய மற்றும் மாகாண ரீதியில் துறைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பிணை ஊக்குவிக்கிறது.

ஏ. மாகாண ஆளணி முகாமைத்துவம் தொடர்பில் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல்.

# அத்தியாயம் 2

## இலங்கையின் பல்வேறு ஆட்சி மட்டங்களுக்கான நிதி அதிகாரப் பரவலாக்கம்

### 2.1. அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம்

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் மூலம், இலங்கையில் அரசாங்கம் (மத்தி), மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகிய மூன்று தனித்துவமான ஆட்சி படிநிலைகள் உருவாக்கப்பட்டன. இதன்படி, வரையறைக்குற்பட்ட சட்டமியற்றும் அதிகாரம் ,நிர்வாகம் மற்றும் நிதி அதிகாரம் ஆகியன மாகாண சபைகளுக்கு வழங்குவதன் மூலம் அதிகாரப் பரவலாக்கம் உருவாக்கப்பட்டது. பதின்மூன்றாம் அரசியலமைப்பு திருத்தத்தில் காணப்படும் ஒதுக்கப்பட்ட பட்டியல் (மத்தியின் அதிகாரங்கள்), மாகாண சபைகளின் பட்டியல் (மாகாண சபைகளுக்கு பகிரப்பட்டுள்ள அதிகாரம்) மற்றும் ஒருங்கியை பட்டியல் (பங்கிடப்பட்ட பொறுப்புக்களின் விடயங்கள்) ஆகிய மூன்று பட்டியல்களிலும் மத்தியாக இயங்கும் அரசிற்கும் மாகாணங்களுக்கும் இடையேயான அதிகாரத்தின் உள்ளடக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு ஏற்பாடு, மாகாண சபைகளின் நியதிச் சட்டங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உப சட்டங்களுக்கு அமைவாக, மாகாண சபைகளுக்கு அரசாங்கத்தால் மாற்றப்படும் நிதியைக் கொண்டு மேற்குறித்த விடயங்கள் சம்பந்தமாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மாகாண சபைகளால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மாகாண சபைகளின் பட்டியலில் மாகாண சபைகளிலிருந்து சேகரிக்கப்பட வேண்டிய வருவாய் மூலங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, இவ்வருவாய் மூலங்கள் அறிக்கையின் 3 ஆம் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு பல்வேறு வரிகள் மற்றும் கட்டணங்களை உள்ளடக்கியுள்ளது. சேகரிக்கப்பட்ட வருமானத்தை மாகாண சபைகள் அதன் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்திக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும் மாகாணத்தின் மொத்த நிதித்தேவையுடன் ஒப்பிடுகையில் வருவாய் சேகரிப்பு குறிப்பிடத்தக்க ஒன்றல்ல. நடைமுறையில், திறைசேரி மதிப்பிடப்பட்ட மாகாண வருவாயை மதிப்பிடப்பட்ட மீண்டெழும் மானியத்தொகையிலிருந்து நீக்குகின்றது. இதன் விளைவாக, மாகாண சபைகள் தனது மாகாண வருமானத்தினை அபிவிருத்தி நடவடிக்கைகளில் உபயோகிக்க முடியாதுள்ளது.

### 2.2. மாகாணங்களுக்கான நிதி மாற்றல்களும் நிதி ஆணைக்குழுவின் ஈடுபாடும்

அரசியலமைப்பானது மாகாணங்களின் நிதித் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு போதுமானளவு நிதி மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என எதிர்ப்பார்க்கிறது. அதேநேரம் அந்நிதியானது சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை அடையும் நோக்கில் மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக நிதி ஆணைக்குழுவின் பங்கு இருவகைப்படும்.

அ. தேசிய கொள்கை வழிகாட்டிகள் ,நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) மற்றும் மாகாண ரீதியில் முன்னுரிமையான விடயங்கள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட தேவைகளின் பகுப்பாய்வின் அடிப்படையில் மாகாணங்களின் நிதித் தேவைப்பாட்டினை தீர்மானித்தல்.

ஆ. அத்தகைய நிதியினை சமநிலையான பிராந்திய அபிவிருத்தியினை அடையும் நோக்கில் மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளித்தல்.

மாகாணங்களுக்கிடையே மற்றும் மாகாணத்திற்குள்ளும் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதை இலக்காகக் கொண்டு மேற்கூறியவாறான நிதிப்பகிர்வு மேற்கொள்ளப்படுகிறது.தேசிய பாதீட்டிலிருந்து நிதி ஆணைக்குழுவினால் மாகாண சபைகளுக்கு மானியங்களாக பரிந்துரைக்கப்படும் நிதி வகைகள் பின்வருமாறு,

### 2.2.1 திரள் மானிய நிதி

திரள் மானிய நிதியானது மாகாண சபைகளின் பொது சேவை வழங்கும் செயற்பாட்டினை தொடர்ந்து நடாத்திச்செல்வதற்கும் மேம்படுத்துவதற்குமான மாகாண சபைகளின் மீண்டெழும் செலவினத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய வழங்கப்படுகிறது.கல்வி மற்றும் சுகாதாரத் துறையின் பெரும்பாலான ஊழியர்கள் மாகாண அமைப்பில் இருப்பதால், மாகாண ஊழியர்களின் தனிப்பட்ட ஊதியங்கள் மீண்டெழும் செலவினங்களின் பெரும் பகுதியைக் கொண்டுள்ளன. உள்ளுர் அதிகார சபைகளுக்கான இடமாற்றங்கள், மூலதன சொத்துக்களின் பராமரிப்பு செலவு, சமூக நலச் செலவுகள், பயணச் செலவுகள், பொருட்கள், ஒப்பந்தச் சேவைகள் போன்றவையும் திரள் மானிய நிதியில் உள்ளடங்கும்.முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால்(DMS) அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மாத்திரமே சம்பளமும் ஊதியமும் வழங்கப்படும்.

### 2.2.2 மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி (PSDG)

இம்மானிய நிதியானது பரவலாக்கப்பட்ட பல்வேறு துறைகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் கவனம் செலுத்தி மூலதனம் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பு செய்வதாகும். நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் வழிகாட்டல்களுக்கமைய அவ்வவ் ஆண்டுக்குரிய மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் அதற்கான மாகாண அபிவிருத்தித் திட்டமொன்று வகுக்கப்படுகிறது. அத்தோடு மாகாண அதிகாரிகளுடன் மேற்கொள்ளும் கலந்துரையாடல்களின் அடிப்படையில் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு நிதி ஆணைக்குழுவினால் ஒப்புதல் வழங்கப்படுகிறது. நடுத்தர ஆண்டு அபிவிருத்தித் திட்டத்திலுள்ள மாகாண தேவைப்பாடுகளை முதன்மையாக கொண்டு தேசிய கொள்கை சட்டகத்துடன் இணங்குமாறு மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு முதலீட்டினதும் மதிப்பிடக்கூடிய பெறுபேறுகள் (வெளியீடு, விளைவு) முற்கூட்டியே வரைவிலக்கணப்படுத்தப்பட்ட குறிகாட்டிகளின் வடிவத்தில் முடிவுகள் என்பன காலாந்தர கண்காணிப்பினை வசதி செய்யவும் சாதனைகளை மதிப்பீடு செய்யவும், பெறுபேறுகள் அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமையில் அமைந்திருக்க வேண்டும்.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் விடுவிக்கப்பட்ட முற்பணத்தொகை மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு, அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 01: மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதிக்கான ஒதுக்கீடு மற்றும் விடுவிப்பு (2021-2023)**

**(ரூ.மில்லியன்.)**

| மாகாணம் | 2021 | | 2022 | | 2023 |
|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு |
| மேல் | 1,256.10 | 690.86 | 836.00 | 418.00 | 1,261.00 |
| மத்திய | 2,440.62 | 1,342.34 | 1,040.00 | 520.00 | 1,889.00 |
| தென் | 2,454.41 | 1,349.93 | 971.00 | 485.50 | 1,620.00 |
| வட | 2,988.81 | 1,643.85 | 1,243.00 | 621.50 | 2,190.00 |
| வட மேல் | 2,362.00 | 1,299.10 | 1,012.00 | 506.00 | 1,708.00 |
| வட மத்திய | 2,670.00 | 1,468.50 | 1,227.00 | 613.50 | 1,946.00 |
| ஊவா | 2,682.21 | 1,847.05 | 1,250.00 | 625.00 | 2,093.00 |
| சப்ரகமுவ | 2,718.52 | 1,495.19 | 1,132.00 | 566.00 | 2,037.00 |
| கிழக்கு | 2,719.25 | 1,495.59 | 1,400.00 | 700.00 | 2,156.00 |
| மொத்தம் | **22,291.92** | **12,632.38** | **10,111.00** | **5,055.50** | **16,900.00** |

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக ஒவ்வொரு துறைகளுக்கும் ஒதுக்கப்பட்ட மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய மானிய நிதியின் அளவு அட்டவணை 02 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 02: துறைகளின் அடிப்படையில் மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய மானிய நிதிக்கான ஒதுக்கீடு - 2022 -2023**

**(ரூ.மில்லியன்.)**

| துறை | 2023 | | 2022 | |
|---|---|---|---|---|
| | தொகை | % | தொகை | % |
| **சமூக உட்கட்டமைப்பு** | **6,554.00** | | **5,325.84** | |
| கல்வி | 2,620 | 15.5 | 2,461.62 | 24.34 |
| மேலைத்தேய மருத்துவம் | 2,000 | 11.83 | 1,920.49 | 18.99 |
| சுதேச மருத்துவம் | 549 | 3.25 | 336.29 | 3.33 |
| விளையாட்டு | 175 | 1.04 | 77.99 | 0.77 |
| நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு | 494 | 2.92 | 281.14 | 2.78 |
| சமூக சேவைகள் | 362 | 2.14 | 113.62 | 1.12 |
| சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் | 98 | 0.58 | 32.65 | 0.32 |
| வீடமைப்பு வசதி | 154 | 0.91 | 56.1 | 0.55 |
| கூட்டுறவு | 51 | 0.3 | 13.23 | 0.13 |
| ஆரம்ப கால குழந்தைப் பருவ வளர்ச்சி | 51 | 0.3 | 32.71 | 0.32 |
| **பொருளாதார உட்கட்டமைப்பு** | **8,991.00** | | **4,282.79** | |
| மாகாண வீதிகள் | 2,951 | 17.46 | 1,759.70 | 17.4 |
| தோட்ட உட்கட்டமைப்பு | 159 | 0.94 | 15.66 | 0.15 |
| போக்குவரத்து | 182 | 1.08 | 82.93 | 0.82 |
| காணி | 55 | 0.33 | 11.98 | 0.12 |
| விவசாயம் | 998 | 5.91 | 427.66 | 4.23 |
| கால்நடை | 679 | 4.02 | 291.59 | 2.88 |
| நன்னீர் மீன்பிடி | 209 | 1.24 | 75.03 | 0.74 |
| நீர்ப்பாசனம் | 1,146 | 6.78 | 540.43 | 5.34 |
| கிராமிய அபிவிருத்தி | 318 | 1.88 | 91.68 | 0.91 |
| சிறு தொழில் | 290 | 1.72 | 141.12 | 1.4 |
| கிராமப்புற மின்மயமாக்கல் | 88 | 0.52 | 37.95 | 0.38 |
| சுற்றுலாத்துறை | 283 | 1.67 | 107.81 | 1.07 |
| உள்ளூராட்சி | 1,633 | 9.66 | 699.25 | 6.92 |
| மொத்தம் | 15,545 | | 9,608.63 | |
| நெகிழ்வான தொகையின் கீழான திட்டங்கள் | 988 | 5.85 | 241.47 | 2.39 |
| விசேட தேவைகளுடைய கிராமங்களுக்கான மானியம் | 367 | 2.17 | 261.42 | 2.59 |
| **மொத்தத் தொகை** | **16,900.00** | | **10,111.52** | |

### 2.2.3 பிரமாண அடிப்படையிலான மானிய நிதி (CBG)

பிரமாண அடிப்படையிலான மானிய நிதியானது மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதி மூலம் போதுமானளவு நிதி கிடைக்கப்பெறாத சிறு துறைகளின் மூலதன செலவினத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக ஒதுக்கப்படும் மானியமாகும். பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு பங்களிக்கும் வகையில் மாகாணங்களில் சமூக-பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதே பிரமாண அடிப்படையிலான மானிய நிதி வழங்குவதன் நோக்கமாகும். மாகாண சபைகளுக்கு பிரமாண அடிப்படையிலான மானிய நிதியினைப் பயன்படுத்துவதற்கான தன்னிச்சை அதிகாரம் காணப்படினும், இம் மானியத்தின் கீழ் வழங்கப்படும் நிதியானது நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல்களுக்கு இணங்க பயன்படுத்தப்பட வேண்டும்.

2019 – 2023 ஆண்டுகளுக்கான பரிந்துரை செய்யப்பட்ட பிரமாண அடிப்படையிலான மானிய நிதிக்கான ஒதுக்கீடுகள் மற்றும் முற்பண விடுவிப்புக்கள் அட்டவணை 03 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 03: பிரமாண அடிப்படையிலான மானிய நிதிக்கான ஒதுக்கீடு மற்றும் விடுவிப்பு - 2019-2023**

**(ரூ.மில்லியன்.)**

| மாகாணம் | 2019 | | 2020 | | 2021 | | 2022 | | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு | விடுவிப்பு | ஒதுக்கீடு |
| மேல் | 254.00 | 150.00 | 101.40 | 101.40 | 392.00 | 215.60 | 80.00 | 44.80 | 223.00 |
| மத்திய | 389.00 | 248.00 | 202.60 | 202.60 | 560.00 | 308.00 | 190.00 | 106.40 | 333.00 |
| தென் | 389.00 | 230.00 | 260.80 | 260.80 | 494.41 | 271.93 | 125.00 | 70.00 | 304.00 |
| வட | 551.00 | 300.00 | 253.81 | 253.81 | 580.82 | 319.45 | 115.00 | 64.40 | 386.00 |
| வட மேல் | 408.00 | 230.00 | 155.80 | 155.80 | 508.00 | 279.40 | 201.00 | 112.56 | 301.00 |
| வட மத்திய | 482.00 | 250.00 | 173.30 | 173.30 | 450.00 | 247.50 | 190.00 | 106.40 | 343.00 |
| ஊவா | 559.00 | 317.00 | 194.60 | 194.60 | 560.48 | 308.26 | 165.00 | 92.40 | 369.00 |
| சப்ரகமுவ | 454.00 | 240.00 | 215.20 | 215.20 | 595.00 | 327.25 | 85.00 | 47.60 | 360.00 |
| கிழக்கு | 514.00 | 255.00 | 194.40 | 194.40 | 511.31 | 281.22 | 180.00 | 100.80 | 381.00 |
| **மொத்தம்** | **4,000.00** | **2,220.00** | **1,751.91** | **1,751.91** | **4,652.02** | **2,558.61** | **1,331.00** | **745.36** | **3,000.00** |

### 2.2.4 வருவாய் செயற் திறன் மானிய நிதி (RPG)

மாகாண வருவாய் சேகரிப்பினை ஊக்குவிக்குமுகமாக அபிவிருத்தி சார் வருவாய் செயற் திறன் மானிய நிதியை நிதி ஆணைக்குழு மாகாண சபைகளுக்கு பரிந்துரைக்கின்றது. இவ் ஒதுக்கீடு செய்யப்பட்டால், மூலதனம் தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இம் மானியத்தை பயன்படுத்த தன்னிச்சை அதிகாரம் மாகாணங்களுக்கு உண்டு. எவ்வாறாயினும், அரசிறை கட்டுப்பாடுகள் காரணமாக, திறைசேரியினால் இந்த மானியத்திற்கான ஏற்பாடுகள் எதுவும் இதுவரை செய்யப்படவில்லை.

# அத்தியாயம் 3

## 2024 ஆம் ஆண்டுக்கான மூலதன மற்றும் மீளெழும் தேவைகளை மதிப்பீடு செய்தல்

### 3.1 மாகாண செலவினத் தேவைகளை மதிப்பீடு செய்யும் போது கவனத்திற் கொள்ளப்பட்ட விடயங்கள்

தேசியப் பாதீட்டில் இருந்து மாகாண சபைகளுக்கான மானியங்களை பரிந்துரைப்பதற்கான தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்யும் போது நிதி ஆணைக்குழு பின்வருவனவற்றை கவனத்திற் கொண்டது.

அ). அரசியலமைப்பு ஆணை, கொள்கை வழிகாட்டல்கள் மற்றும் அமைச்சரவை தீர்மானங்கள் போன்ற பொருத்தமான விடயங்கள்.

ஆ). மாகாண அதிகாரிகளுடனான சந்திப்புக்களின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான அபிவிருத்தித் தேவைகள். அவற்றில் பெரும்பாலானவை மாகாணங்களின் நடுத்தர கால அபிவிருத்தித் திட்டங்களில் அடையாளம் காணப்பட்டவையாகும்.

இ). 2024 ஆம் ஆண்டிற்காக அரசாங்க மானியங்களைக் கோரி மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட மூலதன மற்றும் மீளெழும் செலவினத் தேவைகள் மற்றும் 2023ம் ஆண்டுக்காக இதுவரை மாகாண சபைகளுக்கென விடுவிக்கப்பட்ட நிதியின் தன்மை

ஈ). சமீப காலங்களில் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அதன் மீதான ஜனாதிபதியின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பான அமைச்சரவை தீர்மானங்கள்

உ). மாகாணங்களின் சமூக-பொருளாதார நிலை

ஊ). நீதியான மற்றும் சமநிலை பிராந்திய அபிவிருத்திக்கான தேவைகள் .

எ). உரித்தாளர்களுடன் நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தின் தீர்மானங்களும் மற்றும்ஆய்வுகளில் கண்டறியப்பட்ட விடயங்களும்.

சமநிலையான பிராந்திய அபிவிருத்திக்கு உதவும் என எதிர்பார்த்து, மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியின் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, தேசிய பாதீட்டில் மதிப்பிடப்பட்ட மொத்த மூலதன முதலீட்டில் குறைந்தது 20% ம் மாகாண சபைகளுக்குக் கிடைக்கக் கூடியவாறு நிதி ஆணைக்குழு சமீபத்திய ஆண்டுகளில் பரிந்துரை செய்துள்ளது. இவ்வாறான நிதி மானியங்களை ஒதுக்கீடு செய்யும் போது அதிகாரப் பகிர்வு சட்டகம், அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட தேசிய கொள்கைகள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் என்பன கருத்திற் கொள்ளப்பட வேண்டும். தற்போதைய பொருளாதார வீழ்ச்சி காரணமாக பாதீட்டு நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதில் காணப்படும் வரையறைகளை கருத்திற் கொண்டு, செயற்திட்ட முன்னுரிமைப்படுத்தலுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும், நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு இடையில் ஒரேமாதிரியான செயற்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டுமெனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, முந்திய வருடத்திலும் இந்த விடயத்தில் சுட்டிக்காட்டியது போல, மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களை பிரதான கணக்கீட்டு அதிகாரிகளாக கருதி சிறப்பு செலவின அலகுகளாக அந்த சபைகளை கவனத்திற் கொண்டு நேரடியாக நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது.

## 3.2 நிதி ஆணைக்குழுவின் மதிப்பீட்டுக்காக மாகாண சபைகளின் மூலதன செலவின தேவைகளை முன்வைத்தல்

2024 ஆம் ஆண்டுக்கான மூலதனத் தேவைகளை அடையாளம் காண்பதற்காக 2023 மார்ச் 03ம் திகதி நிதி ஆணைக்குழு மாகாண சபைகளுக்கு வழிகாட்டல்களை வழங்கியது. இவ் வழிகட்டல்களை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபைகள் வருடாந்த மூலதனத் தேவைகளை தயார்படுத்தியுள்ளதோடு, தேசிய பாதீட்டில் இருந்து அரசாங்க நிதி மானியங்களை எதிர்பார்த்து தமது வருடாந்த மூலதனச் செலவின தேவைப்பாடுகளை முன்வைத்துள்ளன.

இந்த நடைமுறைக்கான அடிப்படை ஆவணமாக, அரசாங்க அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் சட்டகத்திற்கு இணைவாக தயாரிக்கப்படும் பிரதேசத்தின் குறிப்பிடத்தக்க தேவைகளை பிரதிபலிக்கும் ஒவ்வொரு மாகாண சபையினதும் விரிவான நடுத்தர கால ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம் காணப்படுகிறது. பல்வேறு நிதி மூலங்களில் இருந்து நிதியுதவி செய்வதற்கான நடுத்தர கால திட்டங்களின் இலக்குகள் மற்றும் காலவரையறையைக் கருத்தில் கொண்டு வருடாந்த அமுலாக்கத் திட்டத்திற்கான செலவினத் தேவைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி, தேசிய வரவு செலவுத் திட்டத்தில் இருந்து மாகாணத்தின் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானிய வடிவில் பெறப்பட்ட நிதியைப் பயன்படுத்தி, தமது அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தும் நோக்கத்திற்காக தொடரும் வருடத்திற்குரிய மாகாண சபைகளின் மூலதனச் செலவுத் தேவை தயாரிக்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் துறைகளின் கீழ் அனைத்து மாகாண சபைகளுக்குமான மூலதன நிதித் தேவைகள் முன்வைக்கப்பட்டுள்ளதோடு, குறிப்பிட்ட ஒரு மாகாணத்தின் குறித்துரைக்கப்பட்ட தேவைகளுக்கு அமைய பொருத்தமான நியாயங்களுடன் மேலதிகத் துறைகளும் ஒன்றிணைக்கப்படலாம்.

- கல்வி
- மேற்கத்திய மருத்துவம்
- சுதேச வைத்தியம்
- மாகாணப் பாதைகள்
- நீர்ப்பாசனம்
- விவசாயம்
- கால்நடைகள்
- நன்னீர் மீன்வளர்ப்பு
- சிறு கைத்தொழில்
- விளையாட்டுக்கள்
- நன்னடத்தை மற்றம் சிறுவர் பராமரிப்பு
- சமூக சேவைகள்
- கலாசார மற்றும் சமய விவகாரங்கள்
- கூட்டுறவு அபிவிருத்தி
- ஆரம்ப சிறுவர்பராய மேம்பாடு
- தோட்ட உட்கட்டமைப்பு
- போக்குவரத்து
- வீடமைப்பு
- கிராமிய மின்சார விநியோகம்
- உள்ளுராட்சி
- சுற்றுலாத் துறை
- கிராமிய அபிவிருத்தி
- காணி அபிவிருத்தி

பல்வேறு துறைகள் மத்தியில் மானிய நிதியை பகிர்ந்தளிக்கும்போது, மேற்குறிப்பிட்ட துறைகளுக்கு மேலதிகமாக, இந்தத் துறைகளில் நிலவும் இடைவெளிகளை நிரப்பும் வகையில் நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய ஒரு தொகையும், விசேட அபிவிருத்தி தேவைகளுக்கான ஒரு மானியத் தொகையும் ஒதுக்கப்படும்.

### 3..3 2024ம் ஆண்டுக்கான மூலதன செலவினத் தேவைகளை மதிப்பீடு செய்தல்

மாகாண துறைசார் மூலதன செலவினத் தேவைகள் அடையாளம் காணப்பட்ட பல்துறை ஒருங்கிணைப்பு அணுகுமுறையின் அடிப்படையில் விரிவாக தயாரிக்கப்பட்ட ஐந்து வருடகால அபிவிருத்தித் திட்டங்களை அல்லது நடுத்தர கால துறைசார் பெறுபேற்று காலசட்டகத்தை மாகாண சபைகள் கொண்டுள்ளன. தொழில்நுட்ப நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள மாகாண சபை அலகுகள், இந்தத் துறைசார் தேவை தொடர்பான மதிப்பீட்டிற்கு மாண்புமிகு ஆளுநர்கள், தலைமைச் செயலாளர்கள் மற்றும் ஏனைய பொருத்தமான மாகாண அதிகாரிகளின் கலந்தாலோசனையுடன் பொறுப்பாக உள்ளன. அத்தோடு, நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள், பிராந்தியங்களின் உள்ளக மற்றும் அவைகளுக்கு இடையிலான முரண்பாடுகள், செயற்திட்ட அமுலாக்கத்தில் உள்ள தயார்நிலை மற்றும் அதற்கு ஈடுகொடுக்கும் தன்மை, நிரல் முகவர் அமைப்புக்களால் அமுல்படுத்தப்படும் விசேட அபிவிருத்தி திட்டங்கள், மூலதன முதலீடுகள் தொடர்பில் வெளியிடப்படும் வழிகாட்டல்கள் மற்றும் சுற்றுநிரூபங்கள் ஊடாக மத்திய பகுதியில் இருந்து வழங்கப்படும் வழிகாட்டல், பொருளாதார நெருக்கடி மற்றும் தொற்றுநோய் நிலைமைகளின் தாக்கம் மற்றும் விளைவு, மாகாணங்களில் பௌதீக மற்றும் மனித வளங்களை உயர்ந்தபட்ச அளவில் பயன்படுத்துவதற்கான தேவை போன்ற விடயங்களில் மேலதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் மீது முதலீடானது உப தேசிய மட்டத்தில் தனியார்த் துறை வளங்களை உயர்ந்தபட்சம் பயன்படுத்துவதற்கு அவசியமானதாகும். அத்தோடு, சமூக உட்கட்டடைப்பு வசதிகளை சிறந்த முறையில் முகாமைப்படுத்துவதற்கும் மதிப்பீடு செய்யப்பட்ட மூலதனத் தேவைகளில் முக்கிய அபிவிருத்தித் தேவைகள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன. பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை புதுப்பித்தல், தொடரும் வேலையை பூர்த்தி செய்தல், பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களின் கீழ் வினைத்திறனான சேவை வழங்களுக்கு முக்கியமாக கருதப்படும் பௌதீக மற்றும் மனித வளங்களை விருத்தி செய்தல் ஆகிய விடயங்கள் மதிப்பிடப்பட்ட மூலதனத் தேவைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன்படி, அரசாங்கக் கொள்கைக்கு ஏற்ப, கட்டட நிர்மாண செயற்திட்டங்களை ஆரம்பிக்கக் கூடாது என்பதோடு, புதிய கட்டட நிர்மாணத்திற்கான கோரிக்கைகள் நீக்கப்பட்டுள்ளன.

2024ம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்ட மொத்த மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத் தொகை 139.575 பில்லியன் ரூபாவாகும். கடந்த வருட பரிந்துரையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத் தொகையை மாகாண வருமான சேகரிப்பு மூலம் ஈடு செய்யுமாறும், எஞ்சிய தொகையை வருடாந்த பாதீட்டில் இருந்து வழங்குமாறும் நிதி ஆணைக்குழு பரிந்துரை செய்தது. இந்த பரிந்துரை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 2023ம் ஆண்டு வரை, மொத்த மீளெழும் தேவையில் இருந்து மாகாண வருமானத்தை இழக்கும் வழமையை திறைசேரி கொண்டிருந்தது. 2024 ஆம் ஆண்டில், அந்த வருமானத்தில் 50 சதவீதமானவை மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத் தொகைக்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், எஞ்சிய 50 சதவீதமான தொகை, மொத்த மீளெழும் தேவைகளுக்காக ஈடு செய்யப்பட வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டுள்ளது. இதன்படி, 139.575 பில்லியன் ரூபா குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத் தொகையில் 11.9 பில்லியன் ரூபா ஈடு செய்யப்பட வேண்டும்.

இந்த அறிக்கைக்கு அமைய, ஓவ்வொரு மாகாண சபையினதும் வருமான இலக்கை பொறுத்து, ஈடு செய்யப்படும் வருமானத் தொகை மாகாணத்திற்கு மாகாணம் மாறுபடுகின்றது. வருமான இலக்குகள் 1025 மில்லியன் ரூபாவில் இருந்து 9200 மில்லியன் ரூபா வரை வித்தியாசப்படுவதையும், அதனைத் தொடர்ந்து மாகாண ரீதியிலான குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடைக்காக பிரதியீடு செய்யப்படும் உத்தேச வருமானத் தொகை 1000 மில்லியன் ரூபாவில் இருந்து 1750 மில்லியன் ரூபா வரை மாறுபடுவதையும் இணைப்பு 01 காட்டுகின்றது. ஆகக் குறைந்த வருமான இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண சபையின் 1025 மில்லியன் ரூபா தொகையில் 97.56 சதவீதமான 1000 மில்லியன் ரூபா ஈடுசெய்யப்படும். மேல் மாகாண சபை அதன் வருமானமாக 9200 மில்லியன் ரூபாவை ஈட்டும்

என்பதோடு, அதில் 19.02 வீதம் 1750 மில்லியன் ரூபா பெறுமதியான மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடைக்காக ஈடு செய்யப்படும்.

எனினும், மீளெழு செலவினம் பற்றிய இந்த பிரேரணையின் முழுமையான தாக்கத்தை குறைக்கும் வகையில், 2024ம் ஆண்டுக்காக மாகாண வருமானத்தில் 50 சதவீதத்தை மாத்திரம் மூலதன மானிய நிதிக்கு எதிராக ஈடு செய்ய வேண்டும் என்றும், எஞ்சியுள்ள 50 சதவீதம் மீளெழு செலவினத்தை நிவர்த்திப்பதற்காக பயன்படுத்த வேண்டும் என்றும் முன்மொழிவதற்கு ஆணைக்குழு விரும்புகின்றது. மாகாண சபைகளுக்கான மொத்த வளப் பாய்ச்சல் (திறைசேரியினால் மாற்றப்படும் மொத்த மூலதன மானிய நிதியும், மூலதன மானிய நிதிக்கு எதிராக மாகாண வருமானத்தை ஈடு செய்வதால் கிடைக்கப் பெறும் தொகையும்) இணைப்பு 01ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூட்டுத் தொகுப்பு சுட்டிக்கு அமைய பங்கிடப்படுவதால், இந்த பிரேணையில் உள்ள கணக்கின் படி எந்தவொரு குறித்தொதுக்கிய மாகாணமும் அளவுக்கு மீறிய அனுகூலத்தை பெறாது என்பதை ஆணைக்குழுவால் உறுதிப்படுத்த முடியும். இதன்படி, மாகாண வருமானத்திற்கு எதிராக ஈடு செய்யப்பட்ட தொகை கழிக்கப்பட்டதன் பின்னர் மீதமாகும் தொகை மாத்திரம் மாகாணங்களுக்கு மாற்றப்படும். மாகாண சபைகளுக்குக் கிடைக்கும் மொத்தத் தொகையின் ஊடாக மேற்கொள்ளப்படும் மூலதன செயற்பாடானது நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டு, அமுல்படுத்தப்படும் வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களுடன் ஒருங்கிணைக்கப்படும். மூலதன மானிய நிதிக்கு எதிராக வருமானத்தை ஈடு செய்ய வேண்டிய தேவையும், அதன்மூலம் மாகாண சபைகளுக்காக கழிக்கப்பட்ட தொகையும் 2023ம் ஆண்டில் வெகுவாக உணரப்பட்டது. காரணம், பாடசாலை போஷணை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மூலதன அடிப்படையிலான சிறு செயற்பாடுகளின் செலவைக் கூட நிவர்த்திக்க முடியாத அளவிற்கு மாகாண அதிகாரிகளிடம் எந்தவொரு ஏற்பாடும் இருக்கவில்லை.

மேலும், 15 பில்லியன் ரூபா பெறுமதியான பிரமாண அடிப்படையிலான மானியத் தொகையும், 3 பில்லியன் ரூபா பெறுமதியான வருமான செயலாற்றுகை மானியத் தொகையும் 2024ம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்க ஆணைக்குழு விரும்புகிறது.

### 3.4 2024 ஆம் ஆண்டுக்கான திரள் மானிய நிதி மதிப்பீடு

நிதி ஆணைக்குழு 2023 ஜனவரி 27 அன்று வழங்கிய வழிகாட்டல்களின்படி மாகாணங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மாகாணங்களின் மீளெழும் தேவைகள் ஆராயப்பட்டு, மாகாண அதிகாரிகள் மற்றும் பொதுத் திறைசேரியின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டன.

2024 ஆம் ஆண்டுக்கான மீண்டெழும் தேவை மதிப்பீடு பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

01. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 31.03.2023 இல் அங்கீகரிக்கப்பட்ட மொத்த மாகாண ஆளணி. கோரிக்கை விடுக்கப்பட்ட மொத்த ஆளணி அனுமதிக்கப்பட்ட ஆளணியையும் விட அதிகமாகும் என்பதோடு, மாகாண சபைகளின் சில நிறுவனங்களில் நிலவும் நிறுவன ரீதியான ஆளணியானது முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அளவையும் விட அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. எமது பரிந்துரையில் நாம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணியின் தனிப்பட்ட ஊதியத்தை மாத்திரமே மதிப்பீடு செய்துள்ளோம். அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பல் நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட ஊதியம் தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

02. சுகாதாரம், சுதேச வைத்தியம், கல்வி போன்ற நிரல் அமைச்சுக்களால் மாகாண சபைகளில் ஏற்கனவே பணியமர்த்தப்பட்ட/இணைக்கப்பட்ட பணியாளர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெறுவதில் நடைமுறை தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை எதிர்பார்த்து மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட இணைப்புக் கடிதங்களை தற்காலிகமாக ஏற்றுக்கொள்ள நிதி ஆணைக்குழு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

03. ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தெரிவு செய்யப்படும் மாகாண சபைகளின் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் அவர்களின் தனிப்பட்ட பணியாளர்க்குரிய தனிப்பட்ட ஊதியங்கள்.

04. அரசாங்கம் அவ்வப்போது வெளியிடும் சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மீதான தாக்கம்

05. அரசாங்கத்தின் உயர் முன்னுரிமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட தொழிலற்ற பட்டதாரிகள் நிரந்தர சேவைக்காக, முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அனுமதியை எதிர்பார்த்துள்ளனர். அதனால், மீதமுள்ளவர்களுக்கான நிதித் தேவை, மிகை ஆளணிக்குரிய தேவையாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறானவர்களுக்குரிய பதவிகள் மாகாண அரசாங்கத் துறையில் உருவாக்கப்பட வேண்டியுள்ளது.

06. பல் நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை (10,494) தற்போதுள்ள வெற்றிடங்களுக்கு உள்ளீர்ப்பதற்கான நிதி. ஏனையவர்கள் மிகை ஆளணியாக மதிப்பிடப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கான பதவிகள் மாகாண அரச துறை மற்றும் உள்நாட்டு அரச நிறுவனங்களில் உருவாக்கப்பட வேண்டியுள்ளது.

07. 1000 பாடசாலைகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்படவுள்ள மாகாண பாடசாலைகளின் ஊழியர்களுக்கான நிதி தேவை 2024 ஆம் ஆண்டு வரை மாகாண சபைகளின் கீழ் கல்வி அமைச்சினால் கோரப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

08. அண்மைக் காலங்களில் நடைமுறையில் உள்ள ஆளணிக்கான தனிநபர் செலவு மற்றும் உண்மையான செலவின முறையை கருத்திற் கொண்டு, 2024ம் ஆண்டுக்கான மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுக்கான நிதித் தேவை மதிப்பிடப்பட்டது (மேலதிக நேர மற்றும் விடுமுறை நாட்களுக்கான மாகாணங்களின் கோரிக்கைகள் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது).

09. அங்கீகரிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற ஆளணிக்கான மீளச் செலுத்தப்படும் சம்பளம் மற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுத் தொகைக்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கென மதிப்பீடு செய்யப்பட்டு, மாற்றம் செய்யப்பட்ட ரூபா 35,891,141,000 தொகையானது ஏனைய மீளெழும் செலவினங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன. (ஏ.மீ.செ 5ஆவது அட்டவணையில்).

10. நிதி ஆணைக்குழு 25/04/2018 அன்று மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைய, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மற்றும் சிறுபராய கால அபிவிருத்தி அதிகார சபை போன்ற மூன்று மாகாண அதிகார சபைகளின் தொழிற்பாடுகளினது முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு அவற்றின் பணியாளர்களுக்கு மாத்திரம் சம்பளம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை பரிந்துரை செய்கின்றது.

11. அன்றாட பராமரிப்புத் தேவைகளுக்குப் போதுமான நிதிகளின் கிடைப்பை உறுதிப்படுத்தும் வகையில் பொதுவான பராமரிப்பு செயற்பாடானது 2022ம் ஆண்டுக்கு முன்னர் வழமையாக செய்தது போன்று ஏனைய மீளெழும் செலவினத்தின் கீழ் அதனை உள்ளடக்குவதற்கு பதிலாக தனித்தனியாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம, விவசாயம் மற்றும் பிற துறைகளுடன் சம்பந்தப்பட்ட வீதிகள், நீர்ப்பாசன உட்டகட்டமைப்பு வசதிகள், கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகள் என்பவற்றை பராமரிப்பது உட்பட அந்த மாகாண சொத்துக்களை திருத்தி அமைப்பதற்கும் புதுப்பிப்பதற்குமான முக்கிய தேவைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு செயற்பாடும் கருத்திற் கொள்ளப்படடுள்ளது.

12. கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய துறைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய சம்பள நிலுவைத் தொகை 2,394,137,000 ரூபாவாகும்.

13. சிறுவர் பராமரிப்பு இல்லங்கள், முதியோர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் புற்றுநோய், சிறுநீரக மற்றும் காசநோயாளிகளுக்குரிய மானியங்களுக்கான சமூக நலன்புரி செலவினத்தையும் ஏனைய மீளெழும் செலவுகள் உள்ளடக்கியுள்ளன.

14. எதிர்பாராத நிதிக்காக மாகாண அதிகாரிகளால் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை 3,404,191,000 ரூபா ஆகும். அத்தோடு, எமது பரிந்துரையில் முற்பண பீ கணக்கு நிதித் தொகையாக 18,336,734,000 ரூபா உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2024ம் ஆண்டுக்கான மாகாண மீண்டெழு தேவைக்கு 514,604.854 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை – 04 : 2024 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட மீளெழும் தேவைகள்

(ரூபா.000

| மாகாணம் | 31.03.2023 அன்றான மு.சே.தி அங்கீகரித்த மாகாண ஆளணி | தனிப்பட்ட ஊதியம் | தனிப்பட்ட ஊதியத்தில் மாகாணத்தின் பங்கு | ஏனைய மீளெழும் செலவுகள் | ஏனைய மீண்டெழும் செலவுகளில் மாகாணத்தின் | மொத்த மீளெழும் செலவுகள் | மொத்த மீளெழும் செலவுகளில் மாகாணத்தின் பங்கு |
|---|---|---|---|---|---|---|---|
| -1 | -2 | -3 | -4 | -5 | -6 | (7)= (3) + (5) | -8 |
| மேல் | 64,761 | 63,041,413 | 16.83 | 25,781,840 | 22.17 | 88,823,253 | 19.06 |
| மத்திய | 53,655 | 49,980,853 | 13.34 | 14,273,074 | 12.27 | 64,253,927 | 11.94 |
| தெற்கு | 48,373 | 45,062,975 | 12.03 | 14,610,586 | 12.56 | 59,673,561 | 12.2 |
| வடக்கு | 37,260 | 33,429,207 | 8.92 | 10,789,391 | 9.28 | 44,218,598 | 9.1 |
| வட மேல் | 50,455 | 46,485,311 | 12.41 | 11,590,073 | 9.97 | 58,075,384 | 11.58 |
| வட மத்திய | 30,642 | 27,323,381 | 7.29 | 9,721,973 | 8.36 | 37,045,354 | 7.36 |
| ஊவா | 35,485 | 31,378,072 | 8.38 | 8,214,474 | 7.06 | 39,592,546 | 8.06 |
| சப்ரகமுவ | 40,753 | 39,588,385 | 10.57 | 10,458,165 | 8.99 | 50,046,550 | 10.82 |
| கிழக்கு | 39,724 | 38,288,963 | 10.22 | 10,845,794 | 9.33 | 49,134,757 | 9.88 |
| **மொத்தம்** | **401,108** | **374,578,559** | **100** | **116,285,370** | **100** | **490,863,929** | **100** |

| | | |
|---|---|---|
| சேர்க்கவும்- | எதிர்பாராத நிதிக்கான கோரிக்கை - 2024 | 3,404,191 |
| | முன்கூட்டிய பீ கணக்கு மீதான கோரிக்கை - 2024 | 18,336,734 |
| | 2022ல் ஏற்பட்ட மத்திய மாகாண சபையின் செலவினத்தை மீளப் பெறுதல் | 2,000,000 |
| | மதிப்பிடப்பட்ட மொத்த மீளெழும் தேவைகள் | **514,604,854** |

*குறிப்பு:* *நிரல் 3 - பணியிலுள்ள ஆளணி மற்றும் வெற்றிடங்களுக்கான தனி நபர் சம்பளம் , நிரல் அமைச்சின் இணைப்புகள் மற்றும் சம்பள நிலுவைகள் ஆகியவை அடங்கும்.*

*நிரல் 4 - உள்ளூராட்சி மாற்றல்கள், பாடசாலை போஷனை நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவினங்கள், மாகாண அதிகாரிகளுக்கான தனிப்பட்ட ஊதியம் என்பன உள்ளடங்குவதோடு, உள்ளூராட்சி மன்றங்களுக்கான முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற அபராதங்கள் இதில் நீக்கப்பட்டுள்ளன.*

### 3.5 மாகாண வருமானம்

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்டுள்ள வருமான மூலங்கள் ஒன்பதாவது அட்டவணையின் பட்டியல் 1 இல் 36.1 முதல் 36.20 வரையான பகுதியில் உள்ளடங்கியுள்ளன.

மாகாண சபைகளின் வருமானம் இரண்டு பிரதான மூலக்கூறுகளில் தங்கியுள்ளது.

1). மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்ட மூலங்களில் இருந்து திரட்டப்படும் வருமானம்

2). அரசாங்க வருமான மாற்றீடுகள்

#### I). மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்ட- மூலங்களில் இருந்து திரட்டப்படும் வருமானம்

மோட்டார் வாகன வருமான அனுமதிப் பத்திரக் கட்டணம், மது விற்பனை மீதான அனுமதிப் பத்திர வரி, முத்திரை வரி, நீதிமன்ற தண்டப்பணம் என்பன மாகாண சபைகளின் முக்கிய வருவாய் மூலங்களாக உள்ளன. இந்த பிரதான மூலங்களில் இருந்து, முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் சட்டரீதியாக உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு மாற்றப்பட வேண்டும்.

நிதிக் கொள்கை சுற்றறிக்கை எண்: 01/2010 மூலம் 2011 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து, மொத்த விற்பனை புரள்வு வரி ரத்து செய்யப்பட்டதன் பின்னர் மாகாண வருவாயின் வரித் தளம் சுருக்கப்பட்டதுடன், அரசாங்க வருமானத்தை மாற்றுவது முக்கியமாக விடயமாக மாறியுள்ளது.

#### II). அரசாங்க வருமான மாற்றீடுகள்

2011 ஆம் ஆண்டில் விற்பனைப் புரள்வு வரி ரத்துச் செய்யப்பட்டதால் மாகாண வருமானம் படிப்படியாகக் குறைந்தது. இந்த வருமானக் குறையானது 2010 டிசம்பர் 29ம் திகதி அன்று திறைசேரியின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 2010ம் ஆண்டு முதலாம் இலக்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் ஊடாக தேசிய பாதீட்டினால் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட வருமானப் பகிர்வு முறையொன்றின் மூலம் குறைநிரப்பப்பட்டது. அத்தோடு, உள்நாட்டு வருமான வரி ஆணையாளர் நாயகம், சுங்கப் பணிப்பாளர் நாயகம், மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் போன்ற தேசிய மட்ட அதிகாரிகளால் திரட்டப்பட்ட வருமானத்தை 2011 ஜனவரி 10ம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் கீழ்வரும் அடிப்படையில் மாகாணங்களுக்கு மாற்றம் செய்ய வேண்டியுள்ளது.

இதன்படி, முத்திரைத் தீர்வையில் 100% மற்றும் வாகனப் பதிவுக் கட்டணத்தில் 70% மாகாண சபைகளுக்கு மாற்றம் செய்யப்படுகின்றன. இருப்பினும், 2019 முதல் ரத்து செய்யப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் (NBT) 33 1/3% பங்கு மாகாணத்திற்கான வருமானத்தின் மற்றுமொரு பிரதான மூலமாக காணப்பட்டது.

அரசாங்க வருமானத்தை மாற்றம் செய்யும் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர், மாகாண சபைகளுக்கு கிடைக்கும் வருமானம் சடுதியாக அதிகரித்தது. துரதிஷ்டவசமாக, 2019ம் ஆண்டு தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரத்து செய்யப்பட்டமையானது மீண்டும் மாகாண வருமானத்தில் குறிப்பிடத்தக்க குறைப்பினை ஏற்படுத்தியது. நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்காக அதிமேதகு ஜனாதிபதி மேற்கொண்ட முன்னெடுப்பின் பயனாக, மோட்டார் வாகன வருமான அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் மூலம் கிடைக்கப் பெறும் வருமானம் அண்மைக் காலமாக அதிகரித்திருப்பதால் மாகாண வருமானத்தில் அதிகரிப்பை கவனிக்க முடிகின்றது. இதற்கமைய, ஏனைய வருமான மூலங்களும் அதிகரிக்கப்பட வேண்டும்.

முத்திரை வரி, நீதிமன்ற தண்டப்பணம், மோட்டார் வாகான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம், மதுவரி மற்றும் ஏனைய வருமானங்கள் உள்ளடங்களாக மாகாணங்களுக்கு பரவலாக்கப்பட்ட வருமான மூலங்களுக்கான இலக்குகளை நிதி ஆணைக்குழு நிர்ணயித்துள்ளது. அரசாங்க வருமானத்தில் இருந்து மாகாணங்களுக்கு மாற்றப்படும் தொகையானது 2010ம் ஆண்டு 01ம் இலக்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் அறிவுறுத்தலுக்கு அமைய தீர்மானிக்கப்படுகிறது. மாகாணத்திற்கான திரள் மானிய நிதியை மதிப்பிடும் போது, மாகாணங்களில் இருந்து எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் மாகாணத் தொகை மீளெழு திரள் மானிய நிதியில் இருந்து திறைசேரியினால் இழக்கப்பட்டுள்ளது. வருமான மூலங்களுக்குரிய இலக்குகளை நிர்ணயிப்பதற்காக கடந்த கால வருமான சேகரிப்பு முறையின் செயலாற்றலுடன் மாகாண அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்படும் வருடாந்த வருமான சேகரிப்பு முறையை நிதி ஆணைக்குழு ஆராய்கின்றது.

2024 ஆண்டுக்காக முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் உட்பட எதிர்பார்க்கப்படும் வருமானத் சேகரிப்பு **59,606** மில்லியன் ரூபா ஆகும். உள்ளூர் அதிகார சபைகளுக்கு மாற்றம் செய்யப்படும் முத்திரை வரியையும், நீதிமன்ற தண்டப்பணத்தையும் தவிர்த்து 2024ம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருமானம் **23,826** மில்லியன் ரூபாவாகும். பரவலாக்கப்பட்ட மூலங்களின் கீழ், 2024 ஆம் ஆண்டுக்காக எதிர்பார்க்கப்படும் வருமானம் அட்டவணை 05 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 05 : 2024ம் ஆண்டில் மாகாண சபைகளுக்கான வருமான இலக்கு**

| | | | | | | | ரூபா.000' |
|---|---|---|---|---|---|---|---|
| மாகாணம் | மதுபானம் மீதான அனுமதிப் பத்திரக் கட்டணம் | மோட்டார் வாகன வருமான அனுமதிப் பத்திரக் கட்டணம் | முத்திரை வரி (மு.வ) | நீதிமன்ற தண்டப்பணம் (நீ.த) | ஏனையவை | மொத்தம் (மு.வ மற்றும் நீ.த நீங்கலாக) | மொத்தம் (மு.வ மற்றும் நீ.த உள்ளடங்கலாக) |
| மேல் | 700,000 | 5,000,000 | 20,000,000 | 1,500,000 | 3,500,000 | 9,200,000 | 30,700,000 |
| மத்திய | 370,000 | 1,300,000 | 2,000,000 | 135,000 | 700,000 | 2,370,000 | 4,505,000 |
| தெற்கு | 130,000 | 1,536,200 | 2,800,000 | 600,000 | 940,000 | 2,606,200 | 6,006,200 |
| வடக்கு | 30,000 | 560,000 | 1,300,000 | 400,000 | 750,000 | 1,340,000 | 3,040,000 |
| வட மேல் | 120,000 | 1,800,000 | 2,700,000 | 425,000 | 1,300,000 | 3,220,000 | 6,345,000 |
| வட மத்திய | 55,000 | 750,000 | 220,000 | 550,000 | 650,000 | 1,455,000 | 2,225,000 |
| ஊவா | 90,000 | 600,000 | 450,000 | 250,000 | 400,000 | 1,090,000 | 1,790,000 |
| சப்ரகமுவ | 90,000 | 980,000 | 1,100,000 | 300,000 | 450,000 | 1,520,000 | 2,920,000 |
| கிழக்கு | 75,000 | 650,000 | 700,000 | 350,000 | 300,000 | 1,025,000 | 2,075,000 |
| *மொத்தம்* | **1,660,000** | **13,176,200** | **31,270,000** | **4,510,000** | **8,990,000** | **23,826,200** | **59,606,200** |

***வாடகைகள், வட்டி, பரீட்சைக் கட்டணம், மூலதனச் சொத்துக்களின் விற்பனை, குதிரைப் பந்தய வரி என்பன ஏனையவற்றில் உள்ளடங்கும்.***

2024ம் ஆண்டுக்கான மொத்த வருமானத்தில் இருந்து உள்ளூர் அதிகாரிகளுக்கு மாற்றம் செய்யப்பட வேண்டிய முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணத்தில் எதிர்பார்க்கப்படும் தொகை 35,780 மில்லியன் ரூபாவாகும். உள்ளூர் அதிகாரிகளுக்கு பகிரப்படும் முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணத்தின் அளவு அட்டவணை 06 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 06 : 2024ம் ஆண்டுக்காக உள்நாட்டு அதிகாரிகளுக்கு மாற்றம் செய்யப்படும் முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப் பணம் மீதான இலக்குகள்**

*(ரூபா.000)*

| மாகாணம் | முத்திரை வரி | நீதிமன்ற தண்டப்பணம் | மொத்தம் | மாகாணப் பங்கு (%) |
|---|---|---|---|---|
| மேல் | 20,000,000 | 1,500,000 | 21,500,000 | 60.09 |
| மத்திய | 2,000,000 | 135,000 | 2,135,000 | 5.97 |
| தெற்கு | 2,800,000 | 600,000 | 3,400,000 | 9.50 |
| வடக்கு | 1,300,000 | 400,000 | 1,700,000 | 4.75 |
| வட மேல் | 2,700,000 | 425,000 | 3,125,000 | 8.73 |
| வட மத்திய | 220,000 | 550,000 | 770,000 | 2.15 |
| ஊவா | 450,000 | 250,000 | 700,000 | 1.96 |
| சப்ரகமுவ | 1,100,000 | 300,000 | 1,400,000 | 3.91 |
| கிழக்கு | 700,000 | 350,000 | 1,050,000 | 2.93 |
| **மொத்தம்** | **31,270,000** | **4,510,000** | **35,780,000** | **100** |

நிதிமாற்ற பொறிமுறையின் அறிமுகத்தைத் தொடர்ந்து வருமானத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை கண்காணிக்க முடிந்த போதிலும், 2019ம் ஆண்டில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ரத்துச் செய்யப்பட்டமையானது அட்டவணை 07 இல் காட்டப்பட்டுள்ளவாறு மாகாண வருமானத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**அட்டவணை 07: மாகாண செலவினம் மற்றும் வருமானக் கிடைப்புக்கள் (2016-2022)**

(ரூபா.மில்லி)

| ஆண்டு | மொத்த செலவினம் | முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் தவிர்ந்த வருமான சேகரிப்பு | அரசாங்க வருமான மாற்றல்கள் | *மாகாணத்தின் மொத்த வருமானம் | மாகாண செலவினத்தில் % ஆக வருமானம் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5=(3+4)** | **6=(5/4)** |
| **2016** | 257,734 | 16,396 | 38,267 | 54,663 | **21** |
| **2017** | 264,158 | 17,425 | 42,491 | 59,916 | **23** |
| **2018** | 281,543 | 18,201 | 45,267 | 63,468 | **23** |
| **2019** | 303,740 | 18,928 | 47,070 | 65,998 | **22** |
| **2020** | 326,418 | 16,767 | 11,240 | 28,007 | **9** |
| **2021** | 342,023 | 18,012 | 10,500 | 28,512 | **8** |
| **2022** | 400,165 | 24,800 | 10,189 | 34,989 | **9** |

**குறிப்பு : *(உள்ளூர் அதிகார சபைகளுக்கு மாற்றப்படும்) முத்திரை வரி மற்றும் நீதிமன்றத் தண்டப்பணத்தை தவிர்த்து**

இவ்வாறு வருமானத்தின் வீழ்ச்சி தொடர்ந்தால், தமது செலவினத்தை சமாளிக்கும் விடயத்தில் மாகாண சபைகள் பல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். அதன் பின்னர், அது அரசாங்கத்திற்கு பெரும் சுமையாக அமையும். இதனால், மாகாண சபைகளுக்கு கூடுதலான நிதியை ஒதுக்க வேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்படும். அதனால், 07ம் இலக்க கொள்கைப் பரிந்துரையில் சுட்டிக்காட்டியுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதன் மூலம் அரசியலமைப்பின்

13ஆவது திருத்தத்தின் மாகாண பட்டியலுக்கு அமைய, மாகாணங்களுக்கு பரவலாக்கப்படும் அனைத்து வருமானங்களையும் சேகரிப்பதற்கான ஒரு கூட்டிணைந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

மேலும், 2023ம் ஆண்டுக்கான 12ம் இலக்க கொள்கைப் பரிந்துரையில் நாம் சுட்டிக்காட்டியுள்ளவாறு, பல வருமான மூலங்கள் நீண்ட காலமாக திருத்தம் மேற்கொள்ளாமல் வழக்கொழிந்த பழைய அளவிலேயே அறவிடப்படுகின்றன. இந்த நிலைமை மாகாண சபைகளுக்கு வருமானத்தை இழக்க வழிவகுக்கும் என்பதோடு, சில வருமானங்கள் நிரல் அமைச்சுக்களால் மாகாண சபைகளுக்கு சரியான முறையில் மாற்றம் செய்யப்படுவதில்லை.

மாகாண வருமான சேகரிப்பிற்கும், அவற்றின் இலக்குகளுக்கும் இடையிலான ஒப்பீட்டாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை - 08 : மாகாணங்களுக்கு பரவலாக்கப்பட்ட வருமான இலக்குகள் மற்றும் சேகரிப்புக்கள் (2018-2022)**

**(ரூபா.மில்லி)**

| மாகாணம் | 2018 | | | 2019 | | | 2020 | | | 2021 | | | 2022 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இலக்குகள் | சேகரிப்பு | % | இலக்குகள் | சேகரிப்பு | % | இலக்குகள் | சேகரிப்பு | % | இலக்குகள் | சேகரிப்பு | % | இலக்குகள் | சேகரிப்பு | % |
| மேல் | 23,725 | 25,449 | 107 | 26,385 | 21,987 | 83 | 26,750 | 19,521 | 73 | 25,400 | 28,285 | 111 | 23,175 | 35,295 | 152 |
| மத்திய | 3,492 | 3,860 | 111 | 4,078 | 3,677 | 90 | 4,195 | 3,304 | 79 | 4,650 | 3,953 | 85 | 3,940 | 4,615 | 117 |
| தெற்கு | 4,010 | 4,379 | 109 | 4,366 | 4,580 | 105 | 4,550 | 4,359 | 96 | 4,846 | 5,304 | 109 | 4,037 | 5,954 | 147 |
| வடக்கு | 1,220 | 1,784 | 146 | 1,580 | 1,990 | 126 | 1,860 | 2,074 | 112 | 2,135 | 2,313 | 108 | 2,345 | 2,948 | 126 |
| வட மேல் | 4,340 | 4,417 | 102 | 4,707 | 4,678 | 99 | 4,970 | 4,438 | 89 | 5,110 | 5,825 | 114 | 5,252 | 7,012 | 133 |
| வட மத்திய | 1,490 | 1,674 | 112 | 1,541 | 1,691 | 110 | 1,826 | 1,904 | 104 | 1,951 | 1,888 | 97 | 1,812 | 2,180 | 120 |
| ஊவா | 1,570 | 1,472 | 94 | 1,495 | 1,389 | 93 | 1,605 | 1,416 | 88 | 1,640 | 1,604 | 98 | 1,629 | 1,760 | 108 |
| சப்ரகமுவ | 2,245 | 1,734 | 77 | 2,195 | 2,720 | 124 | 2,275 | 2,350 | 103 | 2,500 | 2,508 | 100 | 2,477 | 2,810 | 113 |
| கிழக்கு | 1,520 | 1,585 | 104 | 1,640 | 1,523 | 93 | 1,725 | 1,637 | 95 | 1,780 | 1,770 | 99 | 1,752 | 2,057 | 117 |
| **மொத்தம்** | **43,612** | **46,354** | 106 | **47,987** | **44,235** | 92 | **49,756** | **41,003** | 82 | **50,012** | **53,450** | 107 | **46,419** | **64,631** | 139 |

***முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் உட்பட வருமான சேகரிப்பு மற்றும் இலக்கு**

மாகாணங்களுக்கு மாற்றப்படும் அரசாங்க வருமானம் நிதிக் கொள்கை திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்படுகின்றது. அவ்வாறான தொகை மதிப்பீட்டுக்காக கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. வருமானத்தின் இலக்கையும், வருமான விடுவிப்பையும் அட்டவணை 09 காட்டுகின்றது. மாகாணத்திற்குரிய பங்கு மாகாண சபைகளுக்கு முழுமையாக மாற்றப்படவில்லை என்பதை அட்டவணை 09 தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

**அட்டவணை 09: வருமானத்தின் இலக்குகளும், திறைசேரியில் இருந்து விடுவிக்கப்படும் அளவும் (2018-2022)**

(ரூபா.மில்லி)

| மாகாணம் | 2018 | | | 2019 | | | 2020 | | | 2021 | | | 2022 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இலக்குகள் | விடுவிப்பு | % | இலக்குகள் | விடுவிப்பு | % | இலக்குகள் | விடுவிப்பு | % | இலக்குகள் | விடுவிப்பு | % | இலக்குகள் | விடுவிப்பு | % |
| மேல் | 26,400 | 21,659 | 82 | 30,624 | 22,936 | 75 | 30,624 | 4,916 | 16 | 6,720 | 5,001 | 74 | 6,720 | 4,734 | 70 |
| மத்திய | 4,950 | 4,062 | 82 | 5,742 | 4,159 | 72 | 5,742 | 1,137 | 20 | 1,260 | 952 | 76 | 1,260 | 897 | 71 |
| தெற்கு | 4,950 | 4,115 | 83 | 5,742 | 4,175 | 73 | 5,742 | 1,133 | 20 | 1,260 | 951 | 75 | 1,260 | 893 | 71 |
| வடக்கு | 2,750 | 2,222 | 81 | 3,190 | 2,387 | 75 | 3,190 | 517 | 16 | 700 | 513 | 73 | 700 | 531 | 76 |
| வட மேல் | 4,950 | 4,136 | 84 | 5,742 | 4,200 | 73 | 5,742 | 1,180 | 21 | 1,260 | 954 | 76 | 1,260 | 1,096 | 87 |
| வட மத்திய | 2,750 | 2,287 | 83 | 3,190 | 2,188 | 69 | 3,190 | 638 | 20 | 700 | 538 | 77 | 700 | 500 | 71 |
| ஊவா | 2,750 | 2,236 | 81 | 3,190 | 2,290 | 72 | 3,190 | 609 | 19 | 700 | 522 | 75 | 700 | 493 | 70 |
| சப்ரகமுவ | 2,750 | 2,296 | 83 | 3,190 | 2,336 | 73 | 3,190 | 580 | 18 | 700 | 536 | 77 | 700 | 504 | 72 |
| கிழக்கு | 2,750 | 2,254 | 82 | 3,190 | 2,399 | 75 | 3,190 | 530 | 17 | 700 | 533 | 76 | 700 | 539 | 77 |
| **மொத்தம்** | **55,000** | **45,267** | 82 | **63,800** | **47,070** | 74 | **63,800** | **11,240** | 18 | **14,000** | **10,500** | 75 | **14,000** | **10,187** | 73 |

**மூலம்: அரச நிதிக் கொள்கைகள் திணைக்களம் மற்றும் மாகாண வருமான சேகரிப்பு அறிக்கைகள்**

# அத்தியாயம் 4

## 2024 ஆம் ஆண்டுக்கான அரச மானிய நிதியை மாகாண சபைகளுக்கிடையில் பகிர்ந்தளிப்பதற்ககான பரிந்துரைகள்

### 4.1 மூலதன மானிய நிதிப்பகிர்வு மீதான பரிந்துரை

அரசியலமைப்பின் உறுப்புரை 154 (4)(a) இல் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் நிதி ஆணைக்குழு நாட்டில் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு மாகாணங்களுக்கு இடையில் நிதியை பகிர்ந்தளிப்பது தொடர்பில் பரிந்துரை செய்ய வேண்டிய தேவை காணப்படுகிறது. இதன்படி, நிதி ஆணைக்குழுவானது தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் இணைந்து “காரணி பகுப்பாய்வு” என அழைக்கப்படும் ஒரு பன்முக புள்ளிவிபர நுட்பத்துடன் முன்னேற்றகரமான புள்ளிவிவர சூத்திரம் ஒன்றை பின்பற்றி, சம்பந்தப்பட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைய கீழ்வரும் மாகாண மட்ட மாறிகளை கூட்டிணைத்து ஒரு அறிவார்ந்த முறையில் மாகாணங்களுக்கு இடையில் மூலதன நிதியை பகிர்வதற்காக ஒரு கூட்டு சுட்டெண்னை உருவாக்கியுள்ளது.

- நடு ஆண்டில் மாகாணத்தின் சனத்தொகை
- மாகாணத்தின் நிலப்பரப்பு
- மாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி
- மாகாணத்தின் வறிய மக்கள் தொகை
- மாகாணத்தின் சராசரி மாதாந்த தலா வருமானம்
- மாகாணத்தில் ஒரு மேற்கத்திய மருத்துவ அலுவலருக்கான நபர்களின் எண்ணிக்கை
- பல்கலைக்கழக விஞ்ஞான கற்கைகளிற்கு தகுதி பெறும் மாணவர்களின் வீதம்

இந்த மாறிகளுக்கான மாகாண தரவுகள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி மற்றும் பரீட்சைகள் திணைக்களம் என்பவற்றிலிருந்து பெறப்பட்டதோடு, ஏற்கனவே உருவாக்கிய கூட்டு சுட்டெண் புதிதாக கிடைக்கப் பெற்ற தரவுகளைப் பயன்படுத்தி கடந்த வருடம் திருத்தியமைக்கப்பட்டது. இருந்த போதிலும், வருமானம் மற்றும் செலவினம் மீதான புதிய ஆய்வு (இது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நான்கு வருடங்களுக்கு ஒரு தடைவ மேற்கொள்ளப்படுகிறது) இந்த வருடம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் முடிவுகள் இந்த அறிக்கையை தயாரிக்கும் போது கிடைக்கப் பெறவில்லை. எனினும், சமீபத்திய பொருளாதார வீழ்ச்சியின் தாக்கம் அந்த மாகாணங்ளில் பெரும்பாலும் சமமாக பிரதிபலித்திருப்பதால், மேற்குறிப்பிட்ட மாறிக்கு அமைய ஒவ்வொரு மாகாணத்துக்கும் உரிய நிலமைகள் கூடுதலாக மாற்றமடையவில்லை என ஆணைக்குழு நம்புகின்றது. மேலும், கூட்டு சுட்ணெ்ணின் நுண்ணிய மாறி மாகாண வள ஒதுக்கீட்டில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை கொண்டிருக்காது. காரணம், மூலதன வழங்கலில் சுமார் 13 சதவீதம் சராசரியாக பரவலாக்கப்பட்ட விடயதானங்களுக்காக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கூடுதலான தொகை நிரல் அமைச்சுக்களுக்கு வழங்கப்படுகின்றது. பிராந்திய அல்லது மாகாண வேறுபாடுகளை பிரதிபலிக்கும் (அட்டவணை 10 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதி ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படும் கூட்டு சுட்ணெ்ணுக்கு சமனான) ஒரு சுட்டெண்ணை நிரல் அமைச்சுக்கள் கடைபிடிக்க வேண்டும் என ஆணைக்குழு கடந்த வருடம் பரிந்துரை செய்தமைக்கும் இதுதான் காரணம். அதனால், மூலதன மானிய நிதியை பகிர்ந்தளிக்கும் விடயத்தில் நடப்பு ஆண்டுக்காக பரிந்துரைக்கப்பட்ட கூட்டு சுட்ணெ்ணை அடுத்த வருடத்திலும் பயன்படுத்த வேண்டும் என்பதை பரிந்துரைக்க ஆணைக்குழு விரும்புகிறது.

**அட்டவணை 10-: மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பௌதீக, குடித்தொகை மற்றும் சமூக-பொருளாதார குறிகாட்டிகள்**

| **மாகாணம்** | **நிலப் பரப்பு 2020 (சது.கி.மீ)** | **நடு ஆண்டில் சனத்தொகை 2020 (000)** | **மாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2020 (ரூபா.பில்)** | **மாதாந்த தலா வருமானம் 2019 (ரூபா.வருமானம் ஈட்டும் தனிநபர் )** | **வறிய மக்கள் தொகை - 2019** | **பல்கலைக்கழக விஞ்ஞான கற்கைகளிற்கு தகுதி பெறும் மாணவர்களின் வீதம் - 2020** | **. ஒரு மருத்துவ அலுவலருக்கான நபர்களின் எண்ணிக்கை- 2019** |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 3,684 | 6,165 | 5694 | 35,171 | 342,200 | 29.1 | 768 |
| மத்திய | 5,674 | 2,781 | 1692 | 25,067 | 503,500 | 10.8 | 1080 |
| தெற்கு | 5,544 | 2,669 | 1518 | 26,267 | 327,100 | 17.3 | 1291 |
| வடக்கு | 8,884 | 1,152 | 689 | 24,629 | 267,200 | 5.8 | 1016 |
| வட மேல் | 7,888 | 2,563 | 1653 | 28,800 | 294,400 | 11.0 | 1488 |
| வட மத்திய | 10,472 | 1,386 | 876 | 26,323 | 144,900 | 4.5 | 1338 |
| ஊவா | 8,500 | 1,387 | 812 | 22,343 | 378,500 | 5.5 | 1517 |
| சப்ரகமுவ | 4,968 | 2,070 | 1188 | 23,517 | 468,100 | 9.5 | 1463 |
| கிழக்கு | 9,996 | 1,746 | 849 | 25,000 | 316,300 | 6.5 | 1095 |
| **இலங்கை** | **65,610** | **21,919** | **14973** | **28,465** | **3,042,300** | **100.0** | **1070** |

**மூலம்: இலங்கை மத்திய வங்கி, பரீட்சைகள் திணைக்களம், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்**

அட்டவணை 11 இல் காட்டப்பட்டுள்ள கூட்டு சுட்டெண்ணைப் பயன்படுத்தி கணிக்கப்பட்ட வீதத்திற்கு அமைய மாகாணங்கள் மத்தியில் மூலதன நிதி பகிரப்பட வேண்டும் என நிதி ஆணைக்குழு பரிந்துரைக்கிறது.

**அட்டவணை 11: கூட்டு சுட்டெண் பெறுமதிகளும், ஒவ்வொரு மாகாணத்துக்குமான மூலதன நிதி ஒதுக்கீட்டின் சதவீதமும்**

| மாகாணம் | கூட்டுச் சுட்டெண் பெறுமானம் | கூட்டு சுட்டென் பெறுமானத்தின் வீதம் |
|---|---|---|
| மேல் | 0.67633 | 7.42 |
| மத்திய | 1.01174 | 11.11 |
| தெற்கு | 0.92192 | 10.12 |
| வடக்கு | 1.17369 | 12.88 |
| வட மேல் | 0.91576 | 10.05 |
| வட மத்திய | 1.04349 | 11.45 |
| ஊவா | 1.12125 | 12.31 |
| சப்ரகமுவ | 1.09137 | 11.98 |
| கிழக்கு | 1.15499 | 12.68 |
| | | **100.00** |

இதற்கமைய, 2024 ஆம் ஆண்டுக்காக மாகாண சபைகளுக்கு மூலதன மானிய நிதியாக கீழ்வரும் தொகையை நிதி ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

**அட்டவணை-12: 2024 ஆம் ஆண்டுக்காக மாகாண சபைகளுக்கு பரிந்துரைகசுப்பட்ட மூலதன மானியத் தொகை**

| மாகாண சபை | மூலதன மானியங்கள் (ரூபா மில்லியன் ) | | | | % |
|---|---|---|---|---|---|
| | கு.ஒ.அ.மா (PSDG) | பி.அ.மா (CBG) | வ.செ.மா (RPG) | மொத்தம் | |
| மேல் | 8,606 | 1,113 | 849 | 10,568 | 7.26 |
| மத்திய | 14,007 | 1,666 | 282 | 15,955 | 10.95 |
| தெற்கு | 12,625 | 1,518 | 468 | 14,611 | 10.03 |
| வடக்கு | 16,877 | 1,932 | 396 | 19,205 | 13.18 |
| வட மேல் | 12,377 | 1,507 | 333 | 14,217 | 9.76 |
| வட மத்திய | 14,782 | 1,718 | 132 | 16,632 | 11.42 |
| ஊவா | 16,182 | 1,847 | 141 | 18,170 | 12.47 |
| சப்ரகமுவ | 15,521 | 1,797 | 177 | 17,495 | 12.01 |
| கிழக்கு | 16,698 | 1,902 | 222 | 18,822 | 12.92 |
| **மொத்தம்** | **127,675** | **15,000** | **3,000** | **145,675** | **100.00** |

ஒன்பது மாகாண சபைகளுக்கிடையில் ஒரு சீரான திட்டமிடல் சட்டகத்தை பேணும் வகையில் மா.கு.அ.மா இன் கீழ் வழங்கப்படும் மானியங்களுக்கான வருடாந்த அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களின் தொகுப்பை நிதி ஆணைகுழு வழங்கும். வழக்கம்போல, தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் தேசிய பாதீட்டுத் திணைக்கள அதிகாரிகளின் பங்கேற்புடன் நடத்திய கலந்தாலோசனையின் பின்னர் நிதி ஆணைக்குழு மாகாண சபைகளால் தயாரிக்கப்பட்ட வருடாந்த அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குகிறது.

## 4.2 மாகாண சபைகளுக்கு திரள் மானிய நிதியை பரிந்துரை செய்தல்

மாகாண சபைகளுக்கான மீளெழும் தேவைகளுக்கான மானிய நிதியானது மீளெழும் செலவினத் தேவைகளுக்கு மதிப்பிடப்பட்ட இறுதித் தொகை, அந்தந்த மாகாண சபைகளின் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் திறைசேரியில் இருந்து மாற்றப்பட்ட, மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் என்பவற்றில் முழுமையாக தங்கியுள்ளது. மாகாண சபைகளின் செலவினத் தேவைகளும், பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இலக்குகளும் அந்தந்த மாகாண அதிகாரிகள், தேசிய பாதீட்டு திணைக்களம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் மீளாய்வு கலந்துரையாடல்கள் மூலம் நிதி ஆணைக்குழுவினால் மதிப்பிடப்பட்டது.

நிதி ஆணைக்குழு, மதிப்பிடப்பட்ட செலவினங்களுக்கும் அந்த நிறுவனங்களின் எதிர்பார்க்கப்படும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமானத்திற்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்காக மாகாண சபைகளுக்கு திரள் மானிய நிதியையும், அந்த நிறுவனங்களின் எதிர்பார்க்கப்படும் வருமானத்தில் 50 சதவீதப் பங்கையும் பரிந்துரைக்கிறது. மாகாண சபைகளின் மதிப்பிடப்பட்ட மொத்த வருவாயில் ஒரு சிறிய பகுதியாக விளங்கும் அரசாங்க வருமானத்தை மாகாண சபைகளுக்கு மாற்றம் செய்யும் தொகை வருமான மதிப்பீடுகளில் உள்ளடக்கப்படவில்லை. ஏனெனில் இந்த புள்ளிவிவரங்கள் அரச இறைக் கொள்கை திணைக்களத்தால் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

அதன்படி, ஆணைக்குழுவால் 2024 ஆம் ஆண்டிற்கான திரள் மானிய நிதிக்காக பரிந்துரைக்கப்பட்ட தொகை அட்டவணை 13ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 13: 2024 ஆம் ஆண்டுக்கான திரள் மானிய நிதி**

**(ரூபா.000)**

| மாகாணம் | ** மொத்த மீளெழும் செலவு | *** பரவலாக்கப்பட்ட வருமான இலக்கு | *** நிதி ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட திரள் மானியம் (வருமான சீர்படுத்தலின் பின்னர்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4)= (2) - (3) |
| மேல் | 88,823,253 | 7,450,000 | 81,373,253 |
| மத்திய | 64,253,927 | 870,000 | 63,383,927 |
| தெற்கு | 59,673,561 | 1,106,200 | 58,567,361 |
| வடக்கு | 44,218,598 | 240,000 | 43,978,598 |
| வட மேல் | 58,075,384 | 1,570,000 | 56,505,384 |
| வட மத்திய | 37,045,354 | 255,000 | 36,790,354 |
| ஊவா | 39,592,546 | 90,000 | 39,502,546 |
| சப்ரகமுவ | 50,046,550 | 320,000 | 49,726,550 |
| கிழக்கு | 49,134,757 | 25,000 | 49,109,757 |
| **மொத்தம்** | **490,863,929** | **11,926,200** | **478,937,729** |

| | | |
|---|---|---|
| சேர்க்கவும்- | எதிர்பாராத நிதிக்கான கோரிக்கை - 2024 | 3,404,191 |
| | முன்கூட்டிய பீ கணக்கு மீதான கோரிக்கை - 2024 | 18,336,734 |
| | 2022ல் ஏற்பட்ட மத்திய மாகாண சபையின் செலவினத்தை மீளப் பெறுதல் | 2,000,000 |
| | **மதிப்பிடப்பட்ட மொத்த திரள் மானிய நிதி** | **502,678,654** |

*குறிப்பு: ** முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டபணத்துக்கான சீர்படுத்தலின் பின்னர்.*

*****தயவு செய்து இந்த அறிக்கையின் பகுதி 3.3 ஐயும், 05ம் இலக்க கொள்கைப் பரிந்துரையையும் பார்க்கவும்.*

திரள் மானிய நிதியின் அளவை நிர்ணயிக்கும் போது, மதிப்பிடப்பட்ட மொத்த மீளெழு செலவினத்தில் இருந்து மொத்த வருமானத்தை கழிக்கும் வழக்கத்தை திறைசேரி கொண்டுள்ளது. 31.10.2022 அன்று அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட நிதி ஆணைக்குழுவின் பரிந்துரையில் 2024ம் ஆண்டுக்கான 514,604.854 மில்லியன் ரூபா வருமானத் தொகையில் இருந்து மதிப்பிடப்பட்ட 50 சதவீத தொகையை கழித்து வருவதையே திரள் மானிய நிதியாக மதிப்பிட வேண்டும் என கூறப்பட்ட போதிலும், 2024 ஆம் ஆண்டுக்காகவும் வழக்கமான அதே நடைமுறையை திறைசேரி கடைபிடித்துள்ளது.

மூலதன செலவினத்தை சமாளிக்கும் வகையில் எதிர்பார்க்கப்படும் தமது வருமானத் திரட்டில் இருந்து 50 சதவீதத்தை பயன்படுத்த மாகாண சபைகளுக்கு மேலே பரிந்துரைக்கப்பட்ட தொகைக்கு சமமான அளவு அனுமதிக்கப்பட வேண்டும் என முன்மொழியப்படுகிறது.

இதற்கமைய, 2024ம் ஆண்டுக்காக மாகாண சபைகளுக்கு நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்படும் மொத்த மானிய நிதியின் தொகை (மூலதன மற்றும் மீளெழும் தேவைகளுக்குரிய) 648,353.654 மில்லியன் ரூபாவாகும்.

**அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்:**

1. அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஆளணிக்கும், அரச சேவைக்கு தொழிலற்ற பட்டதாரிகளை சேர்த்துக்கொள்ளும் அரசாங்கத்தின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும், பலநோக்கு அபிவிருத்தி செயலணியின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆரம்பநிலை பதவிகளைக் கொண்டவர்களுக்குமான ஒதுக்கீடுகளுக்கு நாம் பரிந்துரை செய்துள்ளோம். இந்த இரண்டு வகையான பதவிகளுக்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. இருந்த போதிலும், இந்த இரண்டு வகை பதவி நிலைகளுக்கும் போதுமான நிதி வழங்கல்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

2. ஆளணியை மதிப்பீடு செய்ய வேண்டிய முக்கிய தேவை காணப்படுகின்றது என்பதையும், ஏற்றுக்கொள்ளக் கூடிய மற்றும் தொழில் வாண்மைத்துவ நியமங்களை அடிப்படையாகக் கொண்ட பாதீட்டு முறையை கடைபிடித்து ஒரு நிறுவன அடிப்படையில் அவர்களை மீண்டும் பணியில் அமர்த்துவது முக்கியம் என்பதை நாம் அவதானித்தோம்.

3. மாகாண தொழிற்பாடுகளை சுமூகமாக முன்னெடுப்பதற்கு முக்கியமாகக் கருதப்படும் கீழ்வரும் நிறுவனங்களுக்குரிய நிதி ஒதுக்கீடானது முகாமைத்து சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் அனுமதியை அடிப்படையாகக் கொண்டது.

   உதாரணமாக, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை
   பயணிகள் போக்குவரத்து அதிகார சபை
   ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி அதிகார சபை

   எனினும், தமது சொந்த வருமானத்தைக் கொண்டு சம்பளம் வழங்கினாலும் கூட, அனுமதிக்கப்பட்ட ஆளணியை விட மிகையான ஆளணியையும் கொண்டிருக்க கூடாது.

4. மாகாண சபைகளுக்கு இணைக்கப்படும் மத்திய அரசினால் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆளணிக்குரிய தனிப்பட்ட ஊதியங்களை செலுத்துவதற்கான நிதிசார் தேவைப்பாடுகளை தமக்கு அனுப்பி வைக்கும்படி நிதி ஆணைக்குழு பிரதான நிரல் அமைச்சுக்களிடம் (சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், கல்வி, விவசாயம்) கோரிக்கை விடுத்துள்ளது. இந்தக் கோரிக்கைக்கு கல்வி அமைச்சு, சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு பதிலளித்துள்ளதோடு, அவற்றின் 2024 ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கடப்பாடுகள் எங்களது மதிப்பீட்டில் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

   ஏனைய அமைச்சுக்களிடம் இருந்து நிதித் தேவைகளுக்கான பதிலளிப்பு இல்லாத காரணத்தால், 2024ம் ஆண்டுக்கான மீளெழு தேவை மதிப்பீட்டில் அவர்களது தேவைகளை உள்ளீர்க்கும் நிலைமையில் நாம் இல்லை.

5. 29.8 பில்லியன் ரூபா பொறுமதியான சொத்து பராமரிப்பிற்குரிய மாகாணத்தின் கோரிக்கைகள், 22 பில்லியன் ரூபாவாக, மாகாண சபைகளுடன் ஆலோசனை நடத்தி தற்போதுள்ள தேவைகள் மற்றும் செலவின் தன்மையை கருத்திற் கொண்டு மதிப்பிடப்பட்டுள்ளது.

6. 2024ம் ஆண்டுக்காக மத்திய மாகாணத்திற்கென மதிப்பீடு செய்யப்பட்ட 63,383,927,000 ரூபா தொகைக்கு மேலதிகமாக 2022ம் ஆண்டில் ஏற்பட்ட செலவினத்தை நிவர்த்திப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட திரள் மானிய நிதியுடன் 2 பில்லியன் ரூபா தொகையை (ஏற்னவே திறைசேரி அனுமதி வழங்கியுள்ளது) சேர்க்க வேண்டியுள்ளது. இதற்கமைய, மத்திய மாகாணத்திற்காக ஒதுக்கப்படும் மொத்த தொகை 65,383,927,000 ரூபாவாகும்.

# அத்தியாயம் 5

## சில கொள்கை பரிந்துரைகள்

வளங்களின் தேவைகள் மற்றும் மாகாணங்களுக்கு மத்தியில் நிதியை பகிர்ந்தளித்தல் தொடர்பில் அரசியலமைப்பின் உறுப்புரை 154ண இன் 4 மற்றும் 5ம் உப பிரிவுகளுக்கு அமைய ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும் முந்திய பரிந்துரைகளுக்கு மேலதிகமாக நிதி ஆணைக்குழுவானது மாகாண மட்டத்தில் வளங்களை அறிவார்ந்த அடிப்படையில் ஒதுக்கீடு செய்து வினைத்திறனாக பயன்படுத்தும் நோக்கில் கீழ்வரும் ஒரு சில கொள்கைப் பரிந்துரைகளை சமர்ப்பிக்க விரும்புகிறது.

**01. மாகாண சபைகளுக்கான நிதிகளின் போதாக்குறையை தீர்ப்பதற்கான ஒரு புதிய அணுகுமுறை :**

சம்பந்தப்பட்ட முந்திய பரிந்துரைகள் :

அ) மாகாண சபைகளுக்குப் போதுமான நிதியை வழங்குதல் (2022ம் ஆண்டுக்கான 01ம் இலக்க பரிந்துரை)

ஆ) தற்போதுள்ள வள கிடைப்பிற்குள் சமநிலையான பிராந்திய அபிவிருத்திக்காக வளங்களை அறிவார்ந்த அடிப்படையில் ஒதுக்கீடு செய்தல் (2023ம் ஆண்டுக்கான 2ம் இலக்க பரிந்துரை)

கடந்த காலத்தில், மாகாண சபைகளுக்கு கிடைக்கப் பெறும் பாதீட்டு நிதி ஒதுக்கீடுகளின் போதாக்குறையை சுட்டிக்காட்டியுள்ள ஆணைக்குழு, நிரல் அமைச்சுக்களின் கீழுள்ள பரவலாக்கப்பட்ட விடயதானங்களுக்கான பாதீட்டு ஒதுக்கீடானது, மாகாண சபைகளுக்காக பரவலாக்கப்பட்ட அதே விடயதானங்களுக்காக ஒதுக்கப்படும் தொகையை விட மிக அதிகமாகும் என்ற விடயத்தை வலியுறுத்தியுள்ளது. முன்னெப்போதும் இல்லாதவாறு நாடு முகம்கொடுத்துள்ள நிதி நெருக்கடிகள் காரணமாக மாகாண சபைகளுக்கு போதியளவு நிதியை ஒதுக்குவதில் அரசாங்கம் சிரமங்களை எதிர்கொள்கின்றது என்ற விடயத்தை ஒப்புக்கொண்டுள்ள நிதி ஆணைக்குழு, அரசாங்கத்தின் மொத்த வளக் கிடைப்பில் மேலதிக சுமையை ஏற்படுத்தாமல், பரவலாக்கப்பட்ட விடயதானங்களுக்காக நிரல் அமைச்சுக்களுக்கு கிடைக்கப் பெறும் நிதி வசதிகள் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட வேண்டும் என்ற நடைமுறைச் சாத்தியமிக்க ஒரு தீர்வை முன்வைக்கின்றது. பாதீட்டு அழைப்பு-2024 இன் ஊடாக இது தொடர்பில் திறைசேரியினால் சில முன்னேற்றங்கள் அடையப் பெற்றுள்ளன என்பதை குறிப்பிடுவதில் ஆணைக்குழு மகிழ்ச்சி அடைகிறது. இந்த விடயம் 4.1 (IV) ஆம் பிரிவில் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

‘‘நிரல் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயற்திட்டங்கள் பிராந்திய மட்டத்தில் மாகாண சபைகளின் நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயற்திட்டங்களுடன் ஒன்றுடன் ஒன்று கலப்பதை தவிர்க்கும் வகையில், மாகாண சபைகளுடன் இணைந்து திட்டம் வகுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது’’

நிரல் அமைச்சுக்கள், கடுமையாக இந்த அறிவுறுத்தல்களை கடைபிடித்தால், அதேபோல் நிரல் அமைச்சுக்களுக்கு பரவலாக்கப்பட்ட விடயதானங்களுக்காக நிதி ஒதுக்கப்படுவதை திறைசேரி கட்டுப்படுத்தினால், திறைசேரியினால் அதன் மொத்த மூலதன பாதீட்டைக் கொண்டு மாகாண சபைகளுக்கு கூடுதலான வளங்களை ஒதுக்க முடியும்.

மேற்குறிப்பிட்ட பரிந்துரை தொடர்பில் திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றுமொரு முன்னேற்றகரமான நடவடிக்கை யாதெனில் இதுவரை காலமும் நிரல் அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பாடசாலை போஷாக்குத் திட்டத்திற்காக 2023ம் வருடத்தில் இருந்து மாகாண சபைகளுக்கு பாதீட்டு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுவதாகும். பிரதம செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ், மாகாண கல்வி அதிகாரிகளுக்கு மேலதிகமாக

மாகாணத்தில் உள்ள ஏனைய சம்பந்தப்பட்ட உரித்தாளர்களின் பங்கேற்புடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் சுமூகமாக முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாகாண அலகுகளால் உணவின் பெறுமதியை அதிகரிப்பதற்காக பங்களிப்புச் செய்யக்கூடிய செயற்பாடுகளும் இந்த மாகாண அதிகாரிகளினால் ஆராயப்பட்டுள்ளது. அதேவேளை, திறைசேரியில் இருந்து ஈடு செய்யப்படும் நடவடிக்கை நிலுவையில் உள்ளவாறு, ஒரு தற்காலிக நடவடிக்கையாக இந்த நோக்கத்திற்கென தமது ஏற்பாட்டின் கீழ் ஏனைய வருமான மூலங்களை பிரதம செயலாளர்கள் பயன்படுத்தலாம் என்பதால் இதற்கான முற்செலவுக்குரிய பணத்தை பெறுவதில் உள்ள சிக்கல்களும் தீர்க்கப்பட்டுள்ளன (பல சந்தர்ப்பங்களில் இவை உள்ளூர் அதிகார சபைகளுக்கு வழங்கப்படுட வேண்டிய மாகாண வருமானங்களாகும்).

மேலே (b) இல் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவு திறைசேரியினால் தொடரப்பட வேண்டும் என்று ஆணைக்குழு உறுதியாக பரிந்துரைக்கிறது.

**02. வள ஒதுக்கீட்டின் வினைத்திறனை விருத்தி செய்தல்:**

சம்பந்தப்பட்ட முந்திய பரிந்துரைகள் :

அ) தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் வளங்களை அறிவார்ந்த அடிப்படையிலான ஒதுக்கீடு செய்வதற்கு பொறுப்பான பலம்பெருந்திய முகவரமைப்பு ஒன்றை உருவாக்குதல் (2023ம் ஆண்டுக்கான 02ம் இலக்க பிரேரனை)

ஆ) தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் பொதுவான ஒன்றிணைக்கப்பட்ட திட்டமிடல் பொறிமுறையை கடைபிடித்தல் (2023ம் ஆண்டின் 06ம் இலக்க பரிந்துரை)

அரசியலமைப்பின் உறுப்புரை 154ண இன் 4 மற்றும் 5ம் உப உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை பல காரணங்களுக்காக மாகாண சபைகளால் மாத்திரம் அடைய முடியாது என திரும்பவும் ஆணைக்குழு அதன் பர்ந்துரையில் வலியுறுத்தியுள்ளது. முதலாவது விடயம் மாகாண சபைகளுக்கு மூலதன மானிய நிதி போதாமல் இருப்பதாகும். இரண்டாவது விடயம் நிரல் அமைச்சுக்கள் பல்வேறு பூகோளரீதியிலான பிராந்தியங்களுக்க வளங்களை ஒதுக்கீடு செய்யும் போது மாகாணத்திற்குள் அல்லது பிராந்தியத்திற்குள் நிலவும் வேறுபாடுகளை பிரதிபலிக்கக்கூடிய எந்தவொரு பிரமாணங்களினாலும் வழிகாட்டப்படுவதில்லை என்ற விடயமாகும். மூன்றாவது காரணி நிரல் அமைச்சுக்களும், மாகாண அதிகார சபைகளும் அபிவிருத்தி செயற்பாடுகளை திட்டமிட வேண்டிய ஒத்திசைவான துறைசார் கொள்கைகள் இல்லாமல் இருப்பதாகும். அதனால், 2023ம் ஆண்டுக்கான எமது பரிந்துரையில் ஒட்டுமொத்த வள ஒதுக்கீடு மற்றும் செயற்திட்டங்களை முன்னுரிமைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இந்தியாவின் முன்னாள் திட்டமிடல் ஆணையகத்திற்கு சமனான ஒரு பலம்பொருந்திய நிறுவனம் அமைக்கப்பட வேண்டும் என நாம் பிரேரணையை முன்வைத்துள்ளோம். இதே பிரேரணை பாராளுமன்ற தேசியப் பேரவையின் உப குழுவொன்றினால் (குறுகிய, மத்திய மற்றும் நீண்டகால தேசிய கொள்கையை உருவாக்குவதில் காணப்படும் முன்னுரிமைப்படுத்தல்களை அடையாளம் காண்பதற்கான உப குழு) முன்வைக்கப்பட்டுள்ளது. கல்விமான்கள் உட்பட சம்பந்தப்பட்ட உரித்தாளர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற பல சந்திப்புக்களில் இது விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டதன் பின்னர், எண்ணக்கரு பத்திரமும், பரிசீலனை நிபந்தனைகளும் தயாரிக்கப்பட்டன. 1957ம் ஆண்டு 58ம் இலக்க தேசிய திட்டமிடல் பேரவைக்கு நிகரான ஒரு பாராளுமன்ற சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த செயற்பாடானது ஒத்திசைவான துறைசார் கொள்கைகளை உருவாக்குவதற்கும், துரித மற்றும் சமநிலை பிராந்திய அபிவிருத்திக்கு உதவும் வகையில் நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டு விரைவுபடுத்தப்பட வேண்டும் என நிதி ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

## 03. அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் சேவை வழங்கல் செயற்பாட்டில் மாகாண அமைப்பு முறையின் மிகச் சிறந்த பயன்பாட்டை பெற்றுக் கொள்ளுதல்

சம்பந்தப்பட்ட முந்தைய பரிந்துரைகள் :

(அ) மத்திய அரசாங்கத்தின் முகவர் நிலையங்களால் அமுல்படுத்தப்படும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்/செயற்திட்டங்களை மாகாணங்களிலும், மாவட்டங்களிலும் அமுல்படுத்தும் விடயத்தில் மாகாண சபைகளை மென்மேலும் சம்பந்தப்படுத்த வைத்தல் (2022ம் ஆண்டிற்கான 4ம் இலக்க பரிந்துரை)

(ஆ) நன்கொடை நிதி மூலமான செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்காக செயற்திட்ட அலுவலகங்களை அமைப்பதில் இருந்து தவிர்ந்து கொள்ளல் (2023ம் ஆண்டுக்கான 4ம் இலக்க பரிந்துரை)

அமைச்சரவையால் இரண்டு முறை அங்கீகரிக்கப்பட்ட இப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் நிரல் அமைச்சுக்கள் மற்றும் மத்தியில் உள்ள பிற முகவர் நிலையங்கள் தயக்கம் காட்டினாலும், 2024ம் ஆண்டுக்கான பாதீட்டு அழைப்பின் 4.1 (IV) பிரிவின் இரண்டாவது பந்தியில் குறிப்பிட்டுள்ள பின்வரும் அறிவுறுத்தல்களின் மூலம் திறைசேரி இதனை மேலும் வலியுறுத்துகின்றது. அதாவது,

“மேலும், குறிப்பிட்டளவு பணியாளர்களை ஈடுபடுத்தும் ஒரு நிறுவன அமைப்பு மாகாண சபைகளின் கீழ் காணப்படுவதால் மாகாண சபைகளின் உடன்படிக்கைகளுடன் நிரல் அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் சேவைகளை வழங்குவதற்கு முடிந்தளவு மாகாண சபைக் கட்டமைப்பை பயன்படுத்த வேண்டும்”.

பல்வேறு நன்கொடை நிதி மூலமான செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான செயற்திட்ட அலுவலகங்களை அமைப்பதற்கு கட்டுப்பாடு விதிக்கும் சமீபத்திய அரசாங்கத்தின் தீர்மானம் ஒரு நேர்கணிய முன்னெடுப்பு என ஆணைக்குழு நம்புகின்றது. இது தொடர்பில் அரசாங்கத்தினால் ஓர் உறுதியான கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆணைக்குழு உறுதியாக பரிந்துரைக்கிறது. இதன்மூலம், அபிவிருத்திப் பங்காளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் சமயத்தில், செயற்திட்டங்களை அமுல்படுத்தும் விடயத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்குரிய நிதி பற்றாக்குறையாக இருப்பதால் தற்போது குறைவாக பயன்படுத்தப்படும் மாகாண சபைகளின் ஆற்றல்மிக்க ஆளணியை முடிந்தளவு பயன்படுத்துவதற்கான தேவைப்பாட்டையும், அதேபோல், நிதி இருந்தும் மாகாண மட்டத்தில் தமக்கு சொந்தமான ஆளணி இல்லாததன் காரணமாக சிரமங்களை எதிர்கொள்ளும் நிரல் அமைச்சுக்களின் செயற்திட்டங்களை முடிந்தளவு அமுல்படுத்துவதன் தேவைப்பாடு குறித்தும் அதிகாரிகளால் எடுத்துச் சொல்ல முடியும்.

## 04. பாதீட்டு செயற்பாடுகளுக்காக மாகாண சபைகளை நேரடியாக பாராளுமன்றத்திற்கு பதிலளிக்க வைத்தல்

சம்பந்தப்பட்ட முந்தைய பரிந்துரைகள் :

(அ) பாதீட்டு நோக்கங்களுக்காக மாகாண சபைகளை விசேட செலவிடும் அலகுகளாக வழிநடத்துதல் (2021ம் ஆண்டுக்கான 01ம் இலக்க கொள்கை பரிந்துரை)

(ஆ) பாதீட்டு நோக்கங்களுக்காக மாகாண சபைகளை விசேட செலவிடும் அலகுகளாக வகைப்படுத்தல் (2022ம் ஆண்டுக்கான 11ம் இலக்க கொள்கைப் பரிந்துரை)

(இ) பிரதம செயலாளர்களை பாராளுமன்றத்திற்கு நேரடியாக பதிலளிக்க வைத்தல் (2023ம் ஆண்டுக்கான 05ம் இலக்க கொள்கைப் பரிந்துரை)

கடந்த காலங்களில், பாதீட்டு நோக்கங்களுக்காக மாகாண சபைகளை விசேட செலவிடும் அலகுகளாக வகைப்படுத்த வேண்டும் என ஆணைக்குழு பல சந்தர்ப்பங்களில் பரிந்துரை செய்துள்ளது. அத்தோடு, அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண நிதி சம்பந்தப்பட்ட விசேட ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளும் பிரதம கணக்கீட்டு அதிகாரிகளாக பிரதம செயலாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. இதே விடயம் 1987ம் ஆண்டு 42ம் இலக்க மாகாண சபை சட்டத்தின் பகுதி மூன்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மாகாண சபைகள் தவிர்ந்த அரசியலமைப்பின் மூலம் தாபிக்கப்பட்ட ஏனைய அனைத்து நிறுவனங்களும் பாதீட்டு நோக்கங்களுக்காக விசேட செலவிடும் முகவர் நிலையங்களாக வழிநடத்தப்படும்.

- அரசியலமைப்பின் 148ஆவது உறுப்புரையின் கீழ் வேண்டப்படுவது போல, மாகாண நிதி நிர்வாகம் நேரடியாக பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படலாம்.

- கடந்த 35 வருடங்களில் மாகாண சபை முறையின் பரிணாம வளர்ச்சியில் நிதி முகாமைத்துவத்துவம் தொடர்பில் தேவையான முதிர்ச்சியை மாகாண சபை முறை அடைந்துள்ளது என்பதை நிரூபிக்கப்பட்டுள்ளது. 2020ம் ஆண்டில் நிதி முகாமைத்துவத்துவம் தொடர்பில் முறையான செயலாற்றலைக் கொண்டிருந்தமைக்காக பொது (அரச) கணக்குகள் மீதான பாராளுமன்றக் குழுவிடமிருந்து தங்கப் பதக்கங்களை பெற்ற 15 அரச நிறுவனங்களில் 12 நிறுவனங்கள், மாகாண முறைக்குரியவை என்பதும் இதற்கு அத்தாட்சியாகும்.

- ஏனைய அனைத்து செலவிடும் அலகுகள் போலில்லாமல் மாகாண சபைகளினால் வேண்டப்படும் வளங்களை பரிந்துரை செய்வதற்காக ஒரு சுயாதீன முகவரமைப்பை (அதாவது, நிதி ஆணைக்குழுவை) பெற்றுக் கொள்வதற்கு அரசியலமைப்பில் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- பிரதம செயலாளரினால் முகாமைப்படுத்தப்படும் பாதீட்டின் அளவு குறிப்பிடத்தக்க அளவில் பெரியதாகும் என்பதோடு, நிரல் அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் போன்றே பிரதம செயலாளர் கௌரவ ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றார்.

- மாகாண சபைகளுக்கு நிதியை விடுவிக்கும் போது நெறிப்படுத்தப்படலாம் (மாவட்ட செயலகங்களைப் போலல்லாமல் மாகாண சபைகள் மீண்டெழு செலவினம் மீதான முற்பணத்தை நேரடியாகப் பெறுவதில்லை).

அதனால், உத்தேச அரச நிதி முகாமைத்துவ சட்டத்தினால் அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் பரந்த ஆளுகை சட்டகத்தின் அறிமுக விடயத்தில் இந்த பிரேரணை விசேட சார்பு நிலையுடன் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என ஆணைக்குழு மீண்டும் பரிந்துரைக்கின்றது.

## 05. மாகாண வருமானத்தை மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக திசைமாற்ற வேண்டிய தேவை

சம்பந்தப்பட்ட முந்தைய பரிந்துரை :

(அ) மாகாணத்தின் வருமானமீட்டலை பரவலாக்க அபிவிருத்தி நோக்கத்துடன் தொடர்புடுத்துதல் (2023ம் ஆண்டுக்கான 07ம் இலக்க பரிந்துரை)

மீளெழு மானிய நிதிக்கு (திரள் மானிய நிதி) நிகராக மாகாண வருமானத்தை ஈடுசெய்யும் தற்போதைய நடைமுறையானது மாகாண சபைகளை தாபிப்பதற்கும், அரசாங்கத்தின் வருமானத்துடன் சேரும் ஏனைய வரிகளையும் விட அதிகமாக வரிகளை விதிக்க அதிகாரமளிப்பதற்கும் கீழ்வரும் காரணங்களுக்காக அரசியலமைப்பு ஏற்பாட்டின் நோக்கத்திற்கேற்ற எண்ணப்பாட்டில் இல்லை என ஆணைக்குழு உறுதியாக நம்புகின்றது.

1) அரசியலமைப்பின் உறுப்புரை 154ண இன் 5ம் உப உறுப்புரைக்கு அமைய “நாட்டில் சமநிலை அபிவிருத்தியை அடைவதற்காக” மாகாண சபைகளை உருவாக்கும் நோக்கம். இது உறுப்புரை (C) மற்றும் (D) மூலம் மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது.
2) நாடுமுழுவதிலும் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும் சேவைகளுக்காக வழங்கும் நிதியுதவியாக அல்லாமல், சமநிலையான பிராந்திய அபிவிருத்திக்காக அரசாங்கத்தின் பாதீட்டில் இருந்து ஒதுக்கப்படும் வளங்களுக்கு மாகாண வரிகள் துணையாக அமையவுள்ளன.
3) மீளெழு செலவினங்களுக்கு எதிராக மாகாண வருமானத்தை ஈடு செய்வதானது சமூகத்தில் ஒரு தரப்பு தாம் அரசாங்கத்திடம் பெறும் சேவைகளுக்காக மேலதிக வரிகளை செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு பாகுபடுத்த வைக்கின்றது. இதனை மாகாணக் கல்வி மற்றும் மாகாண சுகாதார விடயத்தில் தெளிவாக கண்டு கொள்ளலாம். நாட்டின் பொதுவான இலவசக் கல்விக் கொள்கையின் கீழ், தேசியப் பாடசாலைகளின் ஒட்டுமொத்த செலவும் அரசாங்க வருமானத்தில் இருந்து நிவர்த்திக்கப்படுகின்றது. இதற்கு மாகாணப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் பெற்றோர்களும் மறைமுக வரிகள் ஊடாக பங்களிப்புச் செய்கின்றனர். மாகாண வருமானத்தை ஈடுசெய்யும் தற்போதைய நடைமுறையானது மாகாணப் பாடசாலைகளின் பராமரிப்பு செலவின் ஒரு பகுதியை மாகாண அபிவிருத்திக்காக பயன்படும் மாகாண வரிகளில் இருந்து நிவர்த்திக்க வழிகோலுகின்றது. மாகாண வரிகளை மீளெழு செலவினங்களுக்காக பயன்படுத்தாமல் தேசியப் பாடசாலைகளை விட குறைவாகப் பயனடையும் நிலையில் உள்ள மாகாணப் பாடசாலைகளின் மூலதன ரீதியிலான செயற்பாடுகளுக்காக பயன்படுத்தினால் இது மிகவும் தர்க்கரீதியாக இருக்கும்.

அதனால், இந்த நடைமுறையை கைவிடும் பொருட்டு கடந்த வருடம் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரனை அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும், சமநிலையான மாகாண அபிவிருத்தியை நோக்கி மாகாண வரிகளை திருப்ப வைக்கும் வகையில் மூலதன மானிய நிதிக்கு எதிராக வருமானம் ஈடு செய்யப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. ஏற்கனவே, கௌரவ ஜனாதிபதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தப் பரிந்துரை 2022.10.31 அன்று அமைச்சரவையினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனினும், மீளெழு செலவினம் பற்றிய இந்த பிரேரணையின் முழுமையான தாக்கத்தை குறைக்கும் வகையில், 2024ம் ஆண்டுக்காக மாகாண வருமானத்தில் 50 சதவீதத்தை மாத்திரம் மூலதன மானிய நிதிக்கு எதிராக ஈடு செய்ய வேண்டும் என்றும், எஞ்சியுள்ள 50 சதவீதம் மீளெழு செலவினத்தை நிவர்த்திப்பதற்காக பயன்படுத்த வேண்டும் என்றும் முன்மொழிவதற்கு ஆணைக்குழு விரும்புகின்றது. மாகாண சபைகளுக்கான மொத்த வளப் பாய்ச்சல் (திறைசேரியினால் மாற்றப்படும் மொத்த மூலதன மானிய நிதியும், மூலதன மானிய நிதிக்கு எதிராக மாகாண வருமானத்தை ஈடு செய்வதால் கிடைக்கப் பெறும் தொகையும்) இணைப்பு 01ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூட்டுத் தொகுப்பு சுட்டிக்கு அமைய பங்கிடப்படுவதால், இந்த பிரேணையில் உள்ள கணக்கின் படி எந்தவொரு குறித்தொதுக்கிய மாகாணமும் அளவுக்கு மீறிய அனுகூலத்தை பெறாது என்பதை ஆணைக்குழுவால் உறுதிப்படுத்த முடியும்.

இதன்படி, மாகாண வருமானத்திற்கு எதிராக ஈடு செய்யப்பட்ட தொகை கழிக்கப்பட்டதன் பின்னர் மீதமாகும் தொகை மாத்திரம் மாகாணங்களுக்கு மாற்றப்படும். மாகாண சபைகளுக்குக் கிடைக்கும் மொத்தத் தொகையின் ஊடாக மேற்கொள்ளப்படும் மூலதன செயற்பாடானது நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டு, அமுல்படுத்தப்படும் வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களுடன் ஒருங்கிணைக்கப்படும். மூலதன மானிய நிதிக்கு எதிராக வருமானத்தை ஈடு செய்ய வேண்டிய தேவையும், அதன்மூலம் மாகாண சபைகளுக்காக கழிக்கப்பட்ட தொகையும் 2023ம் ஆண்டில் வெகுவாக உணரப்பட்டது. காரணம், பாடசாலை போஷணை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மூலதன அடிப்படையிலான சிறு செயற்பாடுகளின் செலவைக் கூட நிவர்த்திக்க முடியாத அளவிற்கு மாகாண அதிகாரிகளிடம் எந்தவொரு ஏற்பாடும் இருக்கவில்லை.

இந்தப் பிரேரணை அரசாங்கத்திற்கு எந்தவொரு மேலதிக செலவையும் ஏற்படுத்தாது என்பதை குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

**06. 50 மாணவர்களுக்கு குறைவான பாடசாலைகளை மீள் ஒழுங்கமைப்பதன் ஊடாக கிராமியக் கல்வியை விருத்தி செய்ய வேண்டிய தேவை**

சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய, 50 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 1402 பாடசாலைகள் நாடு முழுவதிலும் காணப்படுகின்றன. சில பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை 10 இற்கும் குறைவாகும். பெரும்பாலும் பின்தங்கிய பிரதேசங்களில் மாணவர்கள் எதிர்கொள்ளும் அடைவுநிலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை எடுத்துக் கொண்டால், இவ்வாறான பாடசாலைகள் இருப்பதற்கான ஏற்றகத்தக்க காரணங்கள் இருக்கலாம்.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் கீழ்வருமாறு..

- ❖ கொழும்பின் சுற்றுப்புறப் பகுதிகளிலும், போக்குவரத்து ஒரு தீவிர பிரச்சினையாக இல்லாத அல்லது காட்டு யானைகளின் நடமாட்டம், கரடுமுரடான நிலவமைப்பு, பாதைகளின் குறைபாடு போன்ற காரணங்களால் மாணவர்களின் போக்குவரத்து தடைப்படாமல் உள்ள பல பிரதேசங்களிலும், அதேபோன்ற சிறிய பாடசாலைகள் உள்ளமை.

- ❖ ஒப்பீட்டளவில் பெரும் எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்ட சிறிய பாடசாலைகளின் மாணவர்களை கவர்ந்திழுக்கக் கூடிய பாடசாலைகள் இருப்பதோடு, மாணவர்களை இலகுவாக கவரக்கூடிய சிறு பாடசாலைகளை அண்டிய பகுதிகளில் கூடுதலான வசதிகளும், ஆசிரியர்களும் காணப்படுகின்றமை.

- ❖ மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ள போதிலும், இந்த சிறு பாடசாலைகள் தரம் 1-5 வரை அல்லது 1-10 வரை, சில சந்தர்ப்பங்களில் உயர்தரம் வரை வகுப்புக்களை பராமரிக்க வேண்டியுள்ளது. அத்துடன், ஒவ்வொரு பாடத்திற்கும் போதுமான ஆசிரியர்களை பணிக்கு அமர்த்த வேண்டியுள்ளது. இதன் காரணமாக, குறிப்பிட்ட சில பாடசாலைகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை மாணவர்களின் எண்ணிக்கையையும் விட அதிகமாக உள்ளது. இது ஒவ்வொரு மாணவருக்கும் அதிக செலவைத் தாங்க வழிவகுக்கின்றது.

- ❖ இவ்வாறு கூடுதலான செலவு காணப்படுகின்ற போதிலும், ஏனைய பாடசாலைகளோடு ஒப்பிடும் போது, இந்தப் பாடசாலைகள் மாணவர்களுக்கு சிறந்த கற்றலுக்கான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதில்லை.

- ❖ கிராமப் புறங்களில் உள்ள ஏனைய பாடசாலைகளில் நிலவும் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறையை கருத்திற் கொள்ளும் போது, மேற்குறிப்பிட்ட நிலைமை ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

- ❖ அவ்வாறான சிறிய பாடசாலைகளில் பெரும்பாலானவை அயல் பாடசாலைகளுடன் இணைக்கப்படலாம். அதன் பின்னர், அந்தப் பாடசாலைகளில் உள்ள பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்கள் ஏனைய கிராமப்புற பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்காக விடுவிக்கப்படலாம்.

❖ இந்தப் பாடசாலைகளை மீளொழுங்குபடுத்துவதற்கான எதிர்ப்பு நடவடிக்கை அந்தப் பகுதியில் வசிக்கும் பாடசாலை அதிபர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் இருந்தும், உள்ளூர் அரசியல்வாதிகளிடம் இருந்தும் வருகின்றது.

கிராமப் புறங்களில் பணிபுரியும் ஆசிரியர்களை மிகச் சிறப்பாக பயன்படுத்துவதற்கும், ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் மாணவர்களுக்கு சிறந்த கற்றல் சூழலை வழங்குவதற்கும் இந்தப் பாடசாலைகள் மீள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பதை மேற்குறிப்பிட்ட விடயங்கள் தெளிவாக நியாயப்படுத்துகின்றன. அதனால், அறிவார்ந்த அடிப்படையில் இந்தப் பாடசாலைகளை மீள் ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் ஒரு கொள்கைத் தீர்மானம் பற்றி இங்கு முன்மொழியப்படுகின்றது.

**07. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்ளின் வருமானம் ஈட்டும் சாத்தியப்பாட்டை திரட்டல்**

சம்பந்தப்பட்ட முந்திய பரிந்துரை :

(அ) மாகாண வருமான திரட்டலில் உள்ள கட்டுப்பாடுகளை நீக்குதல் (2023ம் ஆண்டுக்கான 12ம் இலக்க கொள்கைப் பரிந்துரை)

13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரடப்பட்ட சமயத்தில், மாகாண சபைப் பட்டியல் ஊடாக தமது மூலதன தேவைகளில் ஒரு நியாயமான பங்கை மாகாண சபைகளால் உருவாக்க முடியும் என எதிர்பார்க்கப்பட்டது (பகுதி 36.1 முதல் 36.20 வரை). (உண்மையில், இந்த வருமானங்களை அபிவிருத்திப் பணிக்காக வழிப்படுத்துவதற்கு பதிலாக, மீளெழும் மானிய நிதிக்கு எதிராக இது ஈடு செய்யப்படுகிறது). இந்த அறிக்கையின் அத்தியாயம் 03ல் காட்டப்பட்டுள்ளாவாறு, மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய 8 மாகாண சபைகளால் மூலதனத் தேவைகளில் ஒரு பகுதி மாத்திரமே உயர்த்த முடியும். பொருளாதார நடவடிக்கைகளின் பெரும் பகுதி செறிந்திருப்பதால், மேல் மாகாணத்தால் மூலதனத் தேவைகளில் ஒரு நியாயமான அளவை உருவாக்க முடியும். மாகாண அதிகாரிகளுடன் நிதி ஆணைக்குழு நடாத்திய கலந்துரையாடல்கள் மற்றும் இந்த விடயம் தொடர்பான பல்வேறு ஆய்வுகளின் முடிவுகளின் அடிப்படையில் பார்க்கின்ற போது, மாகாணங்களின் வருமானம் ஈட்டும் முழுமையான சாத்தியப்பாடு பயன்படுத்தப்படவில்லை என்பது மிகவும் தெளிவாகின்றது.

நிதி ஆணைக்குழுவினால் திரட்டப்பட்ட தகவல்களுக்கு அமைய, ஒட்டுமொத்த சம்பளமும் அரசாங்கத்தினால் தாங்கிக் கொள்ளப்படுகின்ற உள்ளூராட்சி அதிகார சபைகள் விடயத்தில், சாத்தியமிக்க வருமானத்திற்கும், உணரப்படும் வருமானத்திற்கும் இடையிலான இடைவெளி குறிப்பிடத்தக்க அளவில் கூடுதலாக இருக்கும். சொத்துக்களை காலாந்தர அடிப்படையில் மதிப்பீடு செய்யும் ஒரு முறை இல்லாமை, (2022ல் நிதி ஆணைக்குழு துவங்கும் போது) வருமானத்தை கண்காணிக்கும் முறையில் உள்ள குறைபாடு, வரி செலுத்தும் குடியிருப்பாளர்களுக்கு சிரமாக இருக்கும் வகையில் கைமுறைகளைப் பாவித்து நேரத்தை பயன்படுத்தல் என்பனவற்றை இந்த நிறுவனங்களின் வருமானம் திரட்டும் விடயத்தில் மந்தமான செயலாற்றுகைக்கு தாக்கம் செலுத்தும் பிரதான காரணங்களாக குறிப்பிடலாம். அதனால், மாகாண மட்டத்திலும், உள்ளூராட்சி மட்டத்திலும் வளங்களை திரட்டும் விடயத்தில் காணப்படும் தடங்ல்களை வெற்றி கொள்வதற்காக கீழ்வரும் நடவடிக்கைகளை கடைபிடிக்க வேண்டும் என முன்மொழியப்படுகிறது.

(அ) பல்வேறு சட்டங்களுக்கு அமைய விதிக்கப்பட்ட, தமது அதிகாரத்தின் கீழுள்ள ஆனால், மாகாணப் பட்டடியலின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்ட, பல கட்டணங்கள், தீர்வைகள் மற்றும் அறவீடுகளின் அளவை சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சுக்கள் இற்றைப்படுத்த வேண்டும் என அறிவுறுத்துவதற்கு

(ஆ) மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்ட வரிகள் தொடர்பில் பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் அல்லது வரையறைகளை நீக்குவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு (அரசியலமைப்பின் எதிர்கால திருத்தங்கள் இதில் தாக்கம் செலுத்தும்)

(இ) கீழ்வரும் வழிமுறைகள் மூலம் வருமான சேகரிப்பை மேம்படுத்துவதற்காக மாகாண நிர்வாகத்தை ஊக்கப்படுத்துவதற்காக.

- ❖ இந்த அறிக்கையின் அத்தியாயம் 03ல் பரிந்துரைக்கப்பட்டுள்ள வருமான செயலாற்றல் மானிய நிதி திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் ஊடாக…

- ❖ இந்த அறிக்கையின் அத்தியாயம் 03ல் முன்மொழியப்பட்டுள்ளவாறும், மேலே 05ஆவது கொள்கைப் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறும் மாகாணங்களின் அபிவிருத்தி செலவினத்தை நிவர்த்தி செய்வதற்காக, ஈட்டப்படும் வருமானத்தை பயன்படுத்த மாகாண அதிகாரிகளுக்கு சந்தர்ப்பமளிக்கும் வகையில் மூலதன செலவினத்துக்கு எதிராக மாகாண வருமானத்தில் (குறைந்தபட்சம் 50 சதவீதத்தை) ஈடுசெய்வதன் மூலம்,

(ஈ) தனது அதிகாரத்தின் கீழ் வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய கௌரவ அமைச்சரிடம் உள்ளூர் அதிகார சபைகளுக்காக மாற்று மதிப்பீட்டு முறைமைகளை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுப்பதற்கு,

(உ) மாகாண சபைகள் அல்லது உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்படும் வரி சேகரிப்பின் வினைத்திறனை விருத்தி செய்வதற்காக தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சேகரிப்பு முறைகளை அறிமுகப்படுத்தும் பொருட்டு நன்கொடை உதவியை பெற்றுக் கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராயுமாறு வெளிநாட்டு வளத் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுப்பதற்காக

**இணைப்பு 01**

**உத்தேச வருமான சீர்படுத்தலின் பின்னர் கூட்டு சுட்டெண்ணுக்கு அமைய மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானிய நிதியத்தின் ஒதுக்கீடு பற்றிய விளக்கம்**

ரூபா.மில்லி

| மாகாணம் | புள்ளிவிபர சூத்திரத்திற்கு அமைய கூட்டு சுட்டெண் | மா.கு.அ.மா நிதியின் பரிந்துரைக்கப்பட்ட மொத்தத் தொகை | மதிப்பிடப்பட்ட வருமான இலக்கு | முதிப்பிடப்பட்ட வருமானத்தின் மூலம் அடையக்கூடிய பரிந்துரைக்கப்பட்ட மா.கு.அ.மா நிதியின் % | புரிந்துரைக்கப்பட்ட மா.கு.அ.மா நிதிக்கு எதிராக ஈடுசெய்யப்படும் வருமானம் | பரிந்துரைக்கப்பட்ட மா.கு.அ.மா நிதிக்கு எதிராக ஈடுசெய்யப்படும் வருமானத்தின் % | வருமானம் ஈடு செய்யப்பட்டதன் பின்னர் பரிந்துரைக்கப்படும் மா.கு.அ.மா நிதியின் அளவு* |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | **2** | **3** | **4** | **5=(4/3)*100** | **6** | **7=(6/4)*100** | **8=3-6** |
| மேல் | 0.67633 (7.42%) | 10,356.00 | 9,200.00 | 88.84% | 1,750.00 | 19.02% | 8,606.00 |
| மத்திய | 1.01174 (11.11%) | 15,507.00 | 2,370.00 | 15.28% | 1,500.00 | 63.29% | 14,007.00 |
| தெற்கு | 0.92192 (10.12%) | 14,125.00 | 2,606.20 | 18.45% | 1,500.00 | 57.56% | 12,625.00 |
| வடக்கு | 1.17369 (12.88%) | 17,977.00 | 1,340.00 | 7.45% | 1,100.00 | 82.09% | 16,877.00 |
| வடமேல் | 0.91576 (10.05%) | 14,027.00 | 3,220.00 | 22.96% | 1,650.00 | 51.24% | 12,377.00 |
| வடமத்தி | 1.04349 (11.45%) | 15,982.00 | 1,455.00 | 9.10% | 1,200.00 | 82.47% | 14,782.00 |
| ஊவா | 1.12125 (12.31%) | 17,182.00 | 1,090.00 | 6.34% | 1,000.00 | 91.74% | 16,182.00 |
| சப்ரகமுவ | 1.09137 (11.98) | 16,721.00 | 1,520.00 | 9.09% | 1,200.00 | 78.95% | 15,521.00 |
| கிழக்கு | 1.15499 (12.68%) | 17,698.00 | 1,025.00 | 5.79% | 1,000.00 | 97.56% | 16,698.00 |
| **மொத்தம்** | **100%** | **139,575.00** | **23,826.20** | **17.07%** | **11.900.00** | **49.95%** | **127,675.00** |

***இது, அட்டவணையின் இரண்டாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுச் சுட்டெண்ணுக்கு அமைய வருமானத்தின் 50 சதவீத சீரமைப்பின் பின்னர், 2024ம் ஆண்டுக்காக ஒதுக்கப்படும் தொகை, நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட மொத்த குறித்தொதுக்கிய மாகாண அபிவிருத்தி மானிய நிதியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. உண்மையில், ஒவ்வொரு மாகாண சபைக்கும் கிடைக்கும் உண்மையான தொகை, தேசிய பாதீட்டில் கிடைக்கப் பெறும் குறித்தொதுக்கிய மாகாண அபிவிருத்தி மானிய நிதியில் தங்கியிருக்கும் (தயவு செய்து, அத்தியாயம் 3ல் பந்தி 3.3 ஐயும், 05ம் இலக்க எமது கொள்கை பரிந்துரையின் கடைசி பந்தியையும் பார்க்கவும்)**